பக்கங்கள் எட்டு

Registered as a Newspaper

Time Reader
al Staff Date-Time

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர் 10 வள்ளுவர் ஆண்டு 2026 ஐப்பசி 01 புதன்கிழமை (18-10-1995) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 329

# வலி. கிழக்கில் பல முனைகளில் படை

# முன்னேற எடுத்த முயற்சி முறியடிப்பு

## புலிகளின் கடும் தாக்குதலுக்கு 70 படையினர் வரை பலி

வலிகாமம் கிழக்கு, ஒக்டோபர் 18

வலிகாமம் கிழக்குப் பகுதியின் பல முனைகளில் இருந்தும் நேற்றுக் காலை முதல் பெரும் எடுப்பில் முன்னேற முயன்ற படையினரின் முயற்சியை உக்கிரச் சமர் புரிந்து விடுதலைப் புலிகள் முறியடித்தனர்.

புலிகளின் கடும் தாக்குதலில் நேற்று மட்டும் எழுபது படையினர் வரை உயிரிழந்ததாக ஏஜென்ஸிச் செய்திகள் தெரிவித்தன. ஏழு அதிகாரிகள் உட்பட நூற்றியைம்பது படையினர் படுகாயமுற்றனர்.

டாங்கிகள், பீரங்கிகள் சகிதம் கடும் ஷெல் தாக்குதல்களை நடத்தியவாறு நேற்றுக் காலை 5.40 மணியளவில் நிலாவரை, நவக்கிரி, அச்செழு வடக்கு, ஈவினைப் பகுதிகள் ஊடாக பல முனைகளில் படையினர் முன்னேற முயன்ற போதே உக்கிர மோதல் வெடித்தது.

"சூரியப்பிரகாசம்" (Sun Shine) என்ற பெயரில் நேற்றுக் காலை இந்த இராணுவ நடவடிக்கையை ஆரம்பித்த படையினரை அவர்கள் முன்னேற முயன்ற முனைகளில் வழிமறித்து மாலைவரை புலிகள் கடும் சமர் புரிந்தனர்.

நேற்று நண்பகலில் போர் மிக உக்கிரமாக இருந்தது.

பல முனைகளில் புலிகளின் அதிரடித் தாக்குதல்களுக்கு முகம்கொடுக்க முடியாது படையினர் சிதறி ஓடியதாகவும்—

[8ஆம் பக்கம் பார்க்க]

## 30 போராளிகள் வீரச்சாவு

வலிகாமம் கிழக்கில் நேற்று பல முனைகளில் முன்னேற முயன்ற படையினரை வழிமறித்து தீரத்துடன் தாக்குதல் நடத்திய விடுதலைப் புலிகள் போராளிகளில் நேற்று மாலைவரை முப்பது பேர் களப்பலியானார்கள்.

வீரச்சாவடைந்த வேங்கைகளுக்கு தமிழீழ மக்கள் தமது வீரவணக்கத்தைச் செலுத்தியுள்ளனர் (உ)

## இராணுவ டாங்கி தகர்ப்பு! 2 கவச வாகனங்கள் சேதம்!!

வலிகாமம் கிழக்கில் நேற்று புலிகள் நடத்திய தாக்குதலில் படையினரின் டாங்கி ஒன்று தகர்த்தெறியப்பட்டது; மற்றும் இரு கவச வாகனங்கள் சேதமாக்கப்பட்டன.

படையினரின் கவசவாகனங்களை இலக்கு வைத்து புலிகள் மோட்டார் தாக்குதல்களை நடத்தினர் என்றும் —

இத்தாக்குதலில் படையினரின் மூன்று கவசவாகனங்கள் சேதமுற்றன என்றும் ஸ்ரீலங்கா இராணுவம் ஒப்புக்கொண்டுள்ளது.

## படை வழிநடத்தலில் அனுருத்த

கொழும்பு, ஒக். 18

வலிகாமம் கிழக்கில் நேற்று இடம்பெற்ற இராணுவ நடவடிக்கையை முப்படைத் தளபதிகளுடன் பிரதி பாதுகாப்பு அமைச்சர் கேணல் அனுருத்த ரத்வத்த பலாலியில் தங்கிநின்று வழிநடத்தியதாக கொழும்பில் இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன. (ஒ)

## மட்டக்களப்பிலும் முன்னேற முயற்சித்த படை அணியை சிதறடித்தனர் புலிகள்!

### 32 துருப்புகள் சாவு; 16 சடலங்களும் ஆயுதங்களும் மீட்பு

யாழ்ப்பாணம், ஒக்டோபர். 18

மட்டக்களப்பு மாவட்டத்திலும் பெரும் எடுப்பில் முன்னேற முயன்ற ஸ்ரீலங்கா படை அணியை சிதற அடித்தனர் விடுதலைப் புலிகள்.

இந்த வெற்றிகரத் தாக்குதலில் முப்பத்தியிரண்டுக்கும் அதிக படையினர் சாவடைந்தனர். அவர்களில் 16 பேரின் சடலங்களையும் பெருமளவு ஆயுதங்களையும் விடுதலைப் புலிகள்

(7 ஆம் பக்கம் பார்க்க)

# படையினரின் விநியோகக் கப்பல்

# திருமலை துறைமுகத்தினுள் தகர்ப்பு

## 2 அதிகாரிகள் உட்பட 7 கடற்படையினரும் 2 சிப்பந்திகளும் பலி

கொழும்பு, ஒக்டோபர். 18

வடக்கு, கிழக்கில் உள்ள ஸ்ரீலங்கா இராணுவத்தினருக்கு ஆயுத தளபாடங்கள் மற்றும் அத்தியாவசியப் பொருள்களை விநியோகிக்கும் சேவையில் ஈடுபட்டிருந்த கடற்படையின் விநியோகக் கப்பல் ஒன்றை திருகோணமலை துறைமுகத்துக்குள் வைத்து நேற்று முன்தினம் இரவு கடற்கரும்புலிகள் தகர்த்தெறிந்தனர்.

கடற்கரும்புலிகளின் நேரடித் தாக்குதலில் 'ஏ 512' என்ற இந்தக் கப்பல் அழிந்தது. அதிலிருந்த இரு கடற்

(7 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாவகச்சேரிப் பகுதியில் பாதுகாப்பு நிதி சேகரிப்பு

## இடவிவரம் அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 18

சாவகச்சேரி உதவி அரச அதிபர் பிரிவில் நாளை மறு தினம் வெள்ளிக்கிழமையும் தொடர்ந்து சனி, ஞாயிற்றுக் கிழமைகளிலும் தேசிய பாதுகாப்பு நிதி சேகரிப்பு இடம் பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

தேசிய பாதுகாப்பு நிதியை மட்டுவில் மகாவித்தியாலயத்துக்கு அருகிலும் சாவகச்சேரி கச்சாய் வீதிவருவாய்ப் பகுதிச் செயலகத்திலும் செலுத்த முடியும் என்றும் —

நிதி செலுத்துவதற்கு ஒப்பு தலளித்து இதுவரை பணம் செலுத்தாதவர்கள் மேற் குறிப்பிட்ட இரு இடங்களிலும் காலை 9 மணி முதல் பிற்பகல் 2மணிவரை செலுத்தலாம் என்றும் அறிவிக்கப்பட்டது.

பாதுகாப்பு நிதி செலுத்தவுள்ள கிராம சேவையாளர் பிரிவுகள் வருமாறு:-

சாவகச்சேரி நகர் (யா/300) கோவில் குடியிருப்பு(யா/301) சங்கத்தானை (யா/302), சாவகச்சேரி வடக்கு (யா/303), மண்டுவில் (யா/304) கல்வயல் (யா/305), நுணாவில் கிழக்கு(யா/306), நுணாவில் மத்தி (யா/307), நுணாவில் மேற்கு (யா/308), கைதடி நுணாவில் (யா/309), மட்டுவில் தெற்கு [யா/310], மட்டுவில் நுணாவில் (யா/311) மட்டுவில் மத்தி [யா/312) மட்டுவில் வடக்கு (யா/313), மட்டுவில் கிழக்கு [யா/314), சந்திரபுரம் (யா/315), சரசாலை தெற்கு (யா/316], சரசாலை வடக்கு [யா/316), மீசாலை கிழக்கு [யா/318], மீசாலை மேற்கு [யா/317).

(ஓ)

2×27.5

# மரண அறிவித்தல்கள்

## தம்பிப்பிள்ளை இரத்தினசிங்கம்

புங்குடுதீவு 8 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், தற்போது யாழ்ப்பாணம் ஐந்து சந்தியை வசிப்பிடமாகவும் கொண்டிருந்த தம்பிப்பிள்ளை இரத்தினசிங்கம் நேற்றுக் காலமாகிவிட்டார்.

அன்னார் தம்பிப்பிள்ளை சிவகாமிப்பிள்ளையின் அன்பு மகனும், தவமணிதேவியின் அன்புக் கணவரும், ஸ்ரீகாந்தன், ஸ்ரீதரன், ரஜனி, சுதர்சினி ஆகியோரின் அன்புத் தந்தையாரும், கண்ணையா, தனபாலசிங்கம், தவமணி, பாலசிங்கம், முத்துலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்ற கிருஷ்ணபிள்ளை மற்றும் அன்னலெட்சுமியின் அன்பு மருமகனுமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (18-10-95) புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்:
கி. தியாகராசா (மைத்துனர்)
46 அத்திவாரப் பதிப்பக வீதி,
ஐந்து சந்தி,
யாழ்ப்பாணம் (39054)

## சின்னத்துரை மகாகருணானந்தசிவம்

(மகான் மலசரக்குக் கடை – மாகியப்பிட்டி)

மாகியப்பிட்டியைப் பிறப்பிடமாகவும் கோண்டாவிலை தற்போதைய வதிவிடமாகவும் கொண்ட சின்னத்துரை மகாகருணானந்தசிவம் 17-10-95 அன்று அகால மரணமானார். அன்னார் காலஞ்சென்ற சின்னத்துரை தங்கரத்தினம் தம்பதிகளின் அன்பு மகனும், சுசிலாதேவியின் அன்புக் கணவனும், சிவகுகன் (யாழ்/இந்துக் கல்லூரி) சிவரூபன், சிவநீதன், சிவதயன், சிவஜெனன் ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார், இவரது இறுதிக் கிரியை இன்று 18-10-95 காலை 10-00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தாவடி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறோம்

தகவல்:
ஆ. இரவீந்திரன்.
கே கே எஸ் வீதி,
கோண்டாவில் மேற்கு (39049)

## திருமதி வள்ளியம்மை செல்லையா

கரவெட்டியைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்டவராகிய திருமதி வள்ளியம்மை செல்லையா 16-10-1995இல் காலமாகிவிட்டார்.

அன்னார் இளைப்பாறிய ஆசிரியர் திரு. சி. சி. செல்லையாவின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற Dr. சிவலோகநாதன், திருமதி வேதநாயகி நவரத்தினசிங்கம் ஆசிரியை), மெய்யசிகாமணி [Engineer-Doha/ சிற்றம்பலநாதன் (Jeddah), திருமதி செல்வநாயகி சிவராசசிங்கம், திரு. ஆனந்தசிகாமணி ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற நவரத்தினசிங்கம், திரு V சிவராசசிங்கம், சரஸ்வதி, ருக்மணி, உஷா, வசந்தி ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்

அன்னாரின் இறுதிச் சடங்குகள் அவரது இல்லத்தில் 17-10-95இல் நடைபெற்றன என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றேன்.

தகவல்;
சி. சிவதாஸன்,
(பேரன்)
'வள்ளிமனை',
கரவெட்டி மத்தி,
கரவெட்டி. (39045)

# சூடானாட்டுக்கு உணவு அனுப்புவதற்கு கொழும்பு மாநாட்டில் முடிவாம்

யாழ்ப்பாணம், ஒக். 18

குடாநாட்டுக்குத் தேவையான உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள்களை கப்பல்கள் மூலம் அனுப்ப நேற்று முன்தினம் கொழும்பில் நடந்த உயர் மட்ட மாநாட்டில் முடிவு செய்யப்பட்டதாக தெரியவந்தது.

குடா நாட்டு உணவு நெருக்கடி குறித்து ஆராய ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தலைமையில் நடந்த அந்த மாநாட்டில் யாழ் அரச அதிபர் திரு. க. பொன்னம்பலம் புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சு அதிகாரிகள், பாதுகாப்பு அமைச்சு அதிகாரிகள், யாழ் மாவட்ட எம். பிக்கள் ஆகியோர் கலந்து கொண்டனர் என்று தெரியவந்தது.

உணவு நெருக்கடி நிலை குறித்து விரிவாக ஆராயப்பட்டு உடன் கப்பல் மூலம் பொருள்களை அனுப்ப முடிவு செய்யப்பட்டதாக அறிய வந்தது.

(ஓ-3)

# அரிசியுடன் 'ஓஷன்கரியர்' இன்று வடக்கே புறப்பாடு

குடாநாட்டுக்கு அவசர தேவையாக ஆயிரம் மெற்றிக் தொன் அரிசியை ஏற்றிக் கொண்டு "ஓஷன்கரியர்" கப்பல் இன்று வடக்கு நோக்கிப் புறப்படும் என யாழ்ப்பாணத்துக்கு நேற்றுத் தகவல் கிடைத்தது.

நாளை மறுதினம் பருத்தித் துறைக்கு வந்து சேரும் என எதிர்பார்க்கப்பட்ட இக்கப்பலில் இருந்து அரிசியை இறக்கும் பணி உடன் ஆரம்பிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது

இதேவேளை— 'ஹெந்தல' கப்பல் மீண்டும் திருகோணமலையில் இருந்து பருத்தித்துறைக்கு மா ஏற்றிவரும் பணியை ஆரம்பிக்கும் எனத் தெரியவந்தது. (ஓ-3)

# தமிழ் ஆசிரியர் நியமனம்: விண்ணப்ப முடிவு நவ. 7

கொழும்பு ஒக். 18

அரசாங்க பாடசாலைகளுக்கு தமிழ் மொழி மூல ஆசிரியர்களை நியமிப்பதற்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இந்தப் பதவிக்கு அடிப்படைத்தகைமை ஜி. சீ. ஈ. (உயர்தர) பரீட்சை ஒரே அமர்வில் 3 பாடங்களில் சித்தியடைந்திருக்க வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

வெற்றிடம் நிலவுகின்ற அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை முல்லைத்தீவு யாழ்ப்பாணம் மாவட்டத்தில் உள்ள தீவுப் பகுதிகள், மன்னார், கிளிநொச்சி, வவுனியா ஆகிய மாவட்டங்களில் ஜி. சீ. ஈ. [உயர்தர] பரீட்சையில் சித்தியடைந்தவர்கள் கிடைக்காத பட்சத்தில் —

ஜி. சீ. ஈ. (சாதாரண) பரீட்சையில் 3 பாடங்களில் திறமைச் சித்தி பெற்றவர்களுக்கு இடமளிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது

விண்ணப்ப முடிவு திகதி அடுத்தமாதம் 7 ஆம் திகதியாகும்.

விண்ணப்பம் பற்றிய அறிவுறுத்தலை யாழ்ப்பாணம், இல. 5, இரண்டாவது ஒழுங்கை, மின்சார நிலைய வீதியில் உள்ள உதயன் விளம்பரப் பணிமனையில் பார்வையிடலாம். (ஓ-3)

## பரீட்சை

பயிலுநர் ஆசிரியர்களுக்கான நேர்முகப் பரீட்சை யாழ்ப்பாணத்தில் நடத்துவதற்கு முடியாதுள்ளதெனவும், திட்டமிட்டபடி வவுனியாவிலேயே நடைபெறும் எனவும் கொழும்பில் இருந்து யாழ். அரசாங்க அதிபர் அறிவித்துள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது [ஓ]

## விளையாட்டு நிகழ்வுகள்

யாழ் மாவட்ட பாடசாலைகள் விளையாட்டு அபிவிருத்திக்குழு நடத்தும்— மாவட்ட நிலை—உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று நடைபெறும் ஆட்டங்களில் பங்கு பற்றும் அணிகள் வருமாறு:-

யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில்

★ 19 வயது:- ஸ்கந்தா எதிர் சென். சாள்ஸ் ம. வி.

★ 17 வயது:- ஸ்கந்தா எதிர் நாவற்குழி ம. வி

யாழ். இந்துவில்

★ 17 வயது:- புங்குடுதீவு ம. வி. எதிர் இணுவில் இந்து.

★ ★ ★

யாழ். மாவட்ட தாச்சிச் சங்கம் நடத்தும் ஆண்களுக்கான தாச்சிச் சுற்றுப் போட்டியின் அரையிறுதி ஆட்டங்கள் கைதடிவளர்மதி விளையாட்டு மைதானத்தில் இன்று பிற்பகல் 3-30 மணி முதல் நடைபெறும். பங்குபற்றும் அணிகள் வருமாறு:-

★ கைதடி வளர்மதி வி. க. எதிர் சாந்தை விநாயகர் வி. க

★ [illegible] எதிர் இணுவில் அண்ணா வி. க.

# இரத்தம் தேவை

யாழ்ப்பாணம், ஒக் 18

யாழ் போதனா வைத்திய சாலை இரத்த வங்கியில் தற்போது ஏற்பட்டுள்ள இரத்தம் கையிருப்புக் குறைவை நிவர்த்தி செய்யுமுகமாக மன முவந்து இரத்ததானம் வழங்குமாறு பொதுமக்களிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. [உ-15]


இரு மாதங்களுக்கு ஒரு முறை
நடைபெறும்

2×25

# மாபெரும் வெற்றுப் போத்தல்

பரிசுக் குலுக்கல் போட்டியில்
பரிசு பெற்றோர் இலக்கங்களும், பெயர்களும் வருமாறு

1 ஆம் பரிசு — 14137 சுவர் மணிக்கூடு
J. S தம்பிராஜா, 19/2 காட்டுக் கந்தோர் ஒழுங்கை, சுண்டுக்குளி.

2 ஆம் பரிசு — 12255 எவர் சில்வர் பொருள்கள்
க. சிவலிங்கம், 114, அரசடி வீதி, அமிசர் பார்மசி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

3 ஆம் பரிசு — 14697 ரீசட்
R. ஹீராகவன், பணிக்கர் வளவு ஒழுங்கை, திருநெல்வேலி வடக்கு, யாழ்ப்பாணம்.

ஆறுதல் பரிசில்கள்

1 ஆம் பரிசு — 13829 குடை
ப. பரமசிவம், நாவலர் மடம், நெல்லியடி, கரவெட்டி.

2 ஆம் பரிசு — 13902 தொப்பி / சாப்பாட்டுப்பெட்டி
S. திருவேணி, ஸ்ரேசன் வீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.

3 ஆம் பரிசு — 13904 அல்பம்
சி. சிவரூபன், விதானையார் வளவு, உயரப்புலம், ஆனைக்கோட்டை.

4 ஆம் பரிசு — 13810 பாடசாலைப் பை
செ. குருபரன், 178, துன்னாலை தெற்கு, கரவெட்டி.

5 ஆம் பரிசு — 16600 பிளாஸ்ரிக் வாளி
வினோ, கொக்குவில்.

6 ஆம் பரிசு — 14130 எவர்சில்வர் பேணிகள்
J. பேரின்பரன், கண்டி வீதி, யாழ்ப்பாணம்.

7 ஆம் பரிசு — 10815 கை மணிக்கூடு
க. ஆறுமுகம், வேம்படி, கரவெட்டி தெற்கு.

குறிப்பு:-
வீவா / ஹார்லிக்ஸ் போத்தல்கள் 20-10-95 இல் இருந்து போட்டியில் இருந்து விலக்கப்பட்டுள்ளது.

இரண்டாவது சீட்டிழுப்பு மார்கழி மாதம் 15ஆம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெறும். இன்றே உங்கள் போத்தல்களை எம்மிடம் விற்று உங்கள் அதிர்ஷ்டத்தைப் பரீட்சித்துப்பாருங்கள். இன்றிலிருந்து 15-11-95இற்கு முன் பரிசில்களை பெற்றுக் கொள்ளவும்.

ரேஸ்றலைன் இண்டஸ்றீஸ் (பிறைவேற்) லிமிட்
இல: 4, சீனியர் லேன்,
யாழ்ப்பாணம்.

[கி-2496)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெரும் பொருளாதார நெருக்கடியை எதிர்நோக்கும் இக்கட்டான நிலை

## அரசுக்கு ஏற்படும் என எச்சரிக்கை

கொழும்பு, ஒக். 18

யுத்தச் செலவுகளுக்காக பெருமளவு நிதியைச் செலவிட்டு வரும் ஸ்ரீலங்கா அரசு பெரும் பொருளாதார நெருக்கடி ஒன்றைச் சந்திக்க வேண்டிய இக்கட்டான நிலை ஒன்றை எதிர்கொள்ளப் போகின்றது என எச்சரிக்கை விடுக்கப்பட்டிருக்கின்றது.

பல்வேறு திட்டங்களுக்காக 2 ஆயிரத்து 325 கோடி ரூபா பெறுமதியான பத்து குறை நிரப்புப் பிரேரணைகளை அரசு நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்க இருக்கின்றது.

இவற்றுடன் சேர்த்து அரசு சமர்ப்பிக்கும் குறைநிரப்பு பிரேரணைகளின் எண்ணிக்கை 42 ஆக உயரும்.

இதனால் இந்த ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் துண்டு விழும் தொகை அமைச்சர் பீரிஸ் குறிப்பிட்டது போல உள்நாட்டு நிகர உற்பத்தியின் 7.5 வீதமாக அல்லாது 10 வீதமாக உயரும் எனச் சுட்டிக்காட்டப்படுகின்றது.

தனது செலவுகளுக்காக பொது மக்களிடமிருந்தும் அதிக கடன் பெற்றுக் கொள்ளும் நோக்குடன் திறைசேரி உண்டியலுக்கான வட்டியை 21 சதவீதமாக அரசு உயர்த்தியிருக்கின்றது.

இதனால் பணவீக்கமும், வாழ்க்கைச் செலவு உயர்வும் ஏற்படுவது ஒரு புறமிருக்க—தனியார் நிதி நிறுவனங்கள் மத்திய வங்கியின் திறைசேரி உண்டியல்களுடன் போட்டி போட முடியாமல் "வங்குரோத்து" நிலையை அடைய வேண்டி ஏற்படும் என்றும் அச்சம் தெரிவிக்கப்பட்டுள்ளது. [உ]

## 7 ஆயிரத்து 800 பனை விதைகள் நடப்பட்டன

தமிழீழத்தின் தேசிய வளமான பனை வளத்தை மிகவும் பாரிய அளவில் பெருக்கும் நோக்குடன் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் பனை தென்னை வள அபிவிருத்திப் பகுதியினரால் முன்னெடுக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் கற்பகச் சோலைத் திட்டத்தின் கீழ் கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்துக்கு அருகாமையில் அமைந்த காணியில் 7800 பனம் விதைகள் நடுகை செய்யப்பட்டன.

பனை தென்னை வள அபிவிருத்திப் பகுதியினர் இப்பகுதிகளில் மேலும் பனம் விதைகள் நடுகை செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுவருகின்றனர். எ (எ)

# 10 லட்சம் கறுப்பு இன மக்கள் அமெரிக்காவில் மாபெரும் பேரணி

அமெரிக்காவின் பல்வேறு பகுதிகளையும் சேர்ந்த கறுப்பு இன மக்கள் வெள்ளையர் அடக்குமுறைக்கு எதிராக பேரணி ஒன்றை அமெரிக்கத் தலைநகரான வாஷிங்டனில் நடத்தினார்கள்.

இதில் 10லட்சம் கறுப்பு இன மக்கள் கலந்து கொண்டனர்.

கறுப்பு இன மக்கள் மத்தியில் பொருளாதார ஆக்கப் பேரெழுச்சியை ஏற்படுத்துவதே இப் பேரணியின் நோக்கம் என்று பேரணி அமைப்பாளரான இஸ்லாம் இயக்க தலைவர் லூயிஸ் பரக்கான் பேரணியில் உரையாற்றிய போது கூறினார்.

பேரணியால் மத்திய வாஷிங்டனில் போக்குவரத்து ஸ்தம்பித்தது. நாடாளுமன்றத்தின் இரண்டு சபைகளும் மூடப்பட்டிருந்தன எனவும் அறிவிக்கப்படுகிறது. (இ-க)

# படையினருக்கு ஆடு, கோழிகளை பிடித்துக்கொடுக்கும் பொது மக்கள்

## புத்தூரில் இருந்து வந்தவர் தகவல்

அளவெட்டி, ஒக்.18

புத்தூர் கிழக்கில் உள்ள படையினர் தம்மிடம் சிக்கி உள்ள பொதுமக்களைக் கொண்டு ஆடு, கோழிகளைப் பிடித்து வருகின்றனராம்.

பொதுமக்கள் இதற்காகவயல்களிலும், கைவிடப்பட்ட குடிமனைகளிலும் அலையவேண்டி இருப்பதாகவும்—

பொதுமக்கள் இவற்றைப் பிடித்துவரும் வரை படையினர் காவல் இருப்பதாகவும் படையினரின் பிடியில் இருந்துவிடுபட்டுவந்த ஒருவர் தெரிவித்தார்.

புத்தூர் கிழக்கு குருபரன் சனசமூக நிலையம், அண்ணமார் கோவிலடி பொக்கனைப் பகுதி ஆகியவற்றில் படையினரின் ஷெல் தாக்குதல்களால் பெருமளவு கால் நடைகள் இறந்து கிடக்கின்றன.

இடிமுழக்க தாக்குதல் ராணுவ நடவடிக்கைக்கு ஒரு சில தினங்களுக்கு முன்னர் தான் இப்பகுதி விவசாயிகள் கால போக விதைப்பை மேற்கொண்டிருந்தனர்.

விவசாயிகள் அதிகம் உள்ள பகுதி என்பதால் இங்கு கால் நடைகள் அதிகம்.

நூற்றுக் கணக்கான ஆடு, மாடுகள் வயல்களில் அலைந்து திரிந்து பயிர்களை அழித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பொதுமக்களைக் கொண்டு பிடிக்கும் ஆடுகளையும், கோழிகளையும் படையினர் புத்தூர் அமெரிக்க மிஷன் பாடசாலைக்கு அண்மையில் உள்ள வயல் வெளியில் பட்டியாக அடைத்து வைத்துள்ளனர் என்றும்—

தேவையான போது அவற்றை பிடித்து உண்பதாகவும்தெரிவிக்கப்படுகிறது. (இ-13)

# டக்ளஸ் தேவானந்தா மீது தாக்குதல் நடத்தியவர்கள் யார்?

## ஒன்றுக் கொன்று முரணான தகவல்

கொழும்பு, ஒக். 18

இம்மாதம் 9ஆம் திகதி ஈ. பி. டி. பி. தலைவர் டக்ளஸ் தேவானந்தா மீது நடத்தப்பட்ட தாக்குதல் குறித்து கொழும்புப் பத்திரிகைகள் ஒன்றுக்கொன்று முரணான தகவல்களை வெளியிட்டு வருகின்றன.

அதே போன்று டக்ளஸ் தேவானந்தாவும், அவரது சகாக்களும் மாறுபட்ட கருத்துக்களைத் தெரிவித்து வருகின்றனராம்.

புலிகள் தான் இதனைச் செய்திருக்க வேண்டும் என்கிறார் டக்ளஸ்தேவானந்தா. ஆனால் அவரது சகாக்கள் இல்லை என்கின்றனர்.

டக்ளஸ் தேவானந்தா மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின் பின்னணியில் விடுதலைப் புலிகள் செயற்படவில்லை எனவும் —

அரசுக்குப் பாதுகாப்பு வழங்கி வரும் விசேஷ அதிரடிப் படையினரே செயற்பட்டனரென அரசியல் வட்டாரத்தினர் சந்தேகப்படுவதாகவும் "ஹிரு" சிங்கள வார இதழ் தெரிவிக்கிறது.

சம்பவம் நடைபெற்ற தினத்தன்று பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டிருந்த ஈ. பி. டி. பி. உறுப்பினர்கள் பத்திரிகையாளர் ஒருவருக்குத் தெரிவித்த தகவலை அடுத்தே இச்சந்தேகம் ஏற்பட்டுள்ளதாக "ஹிரு" பத்திரிகை மேலும் தெரிவிக்கிறது.

அவர்கள் தெரிவித்த தகவல்களின்படி சம்பவம் இடம் பெற்ற பின்னர் அந்த இடத்தைச் சோதனையிட்டபோது பச்சை நிறத்திலான தொப்பி ஒன்று கண்டெடுக்கப்பட்டுள்ளதாம். அந்தத் தொப்பியில் சிங்கத்தின் இலச்சினை இணைக்கப்பட்டிருந்ததாம்.

பலரின் கருத்துப்படி இவ்வாறான தொப்பிகளை விசேஷ அதிரடிப்படையினரே அணிவது வழக்கமாம்.

மேலும் இத்தாக்குதலை மேற்கொள்ள வந்த குழுவினர் வெள்ளை நிறத்திலான உடுப்பையும் பாதுகாப்புப் பிரிவினர் அணியும் சீருடையை ஒத்த உடையையும் அணிந்திருந்தனராம்.

பலத்த பாதுகாப்புடன் அமைந்துள்ள இப்பகுதிக்கு இராணுவ, பொலிஸ் வீதித் தடைகளையும் தாண்டி டக்ளஸின் வீட்டுக்கு தாக்குதல் குழுவினர் எவ்வாறு வந்தடைந்தனர் என்பது குறித்து சந்தேகம் எழுந்துள்ளது.

மேலும் இத்தாக்குதலை மேற்கொண்ட பின்னர் கனரக ஆயுதங்களைக் கைகளில் ஏந்திய வண்ணம் சுற்றாடலில் இருந்த காவல் சாவடிகளை எவ்வாறு அவர்கள் கடந்தார்கள் என்ற சந்தேகமும் உருவாகிறது என பாதுகாப்புத் துறையைச் சேர்ந்த [illegible] தெரிவிக்கிறது. (இ-10)

## புலிகளின் குரல் வானொலியில்

18 – 10 – 1995

புதன் இரவு

- ★ 8-02 — குயிலோசை — நிகழ்ச்சியில் பண்டாரவன்னியன் இசைநாடகத்தின் 2 ஆம் அங்கம்
- ★ 8-20 — வாத்தியகானங்கள்
- ★ 8-30 — செய்திகள்
- ★ 8-40 — நாடகம்— மலரன்னை எழுதிய 'வேம்பும் இனிக்கும்'

19 – 10 – 1995

வியாழன் காலை

- ★ 7-02 — மாவீரவணக்கம்
- ★ 7-15 — விடுதலை கீதங்கள்
- ★ 7-30 — செய்திகள்
- ★ 7-35 — பத்திரிகைச் செய்திகள் அதனைத் தொடர்ந்து
- ★ 8-00 — மணிவரை விடுதலை கீதங்கள்—நிகழ்ச்சியின் தொடர்ச்சி

## தமிழீழ வானொலியில்

புதன் மாலை

- ★ 5-01 — சிந்தனைச் சிதறல்
- ★ 5-02 — எழுச்சிகீதம்
- ★ 5-10 — புதியவை
- ★ 5-15 — படப்பாடல்
- ★ 5-30 — அறிவூற்று
- ★ 6-00 — சிந்தனைக்குச் சில வினாடிகள்
- ★ 6-02 — உங்கள் தெரிவு
- ★ 6-10 — செய்திகள்
- ★ 6-15 — விளையாட்டுச் செய்திகள்
- ★ 6-20 — உங்கள் தெரிவு

## சந்திரிகாவின் கொடும்பாவி எரிப்பு

வடமராட்சி, ஒக். 18

உடுப்பிட்டிச் சந்தியில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவின் கொடும்பாவி கடந்த திங்கள் இரவு எரிக்கப்பட்டது.

இதேபோல நெல்லியடிச் சந்தியிலும் அண்மையில் சந்திரிகாவின் கொடும்பாவி எரிக்கப்பட்டது. (இ-173)

## பிரதேச செயலகம் தென் மராட்சியில்

தென்மராட்சி, ஒக். 18

வலி கிழக்கில் இருந்து இடம்பெயர்ந்துள்ள மக்களின் நலன் கருதி வலி. கிழக்கு பிரதேச செயலகம் பிரதி செவ்வாய், வியாழன் ஆகிய தினங்களில் சாவகச்சேரி நகர சபை மண்டபத்தில் இயங்கும் என பிரதிச் செயலாளர் அறிவித்துள்ளார்.

இடிமுழக்க இராணுவ நடவடிக்கையை அடுத்து இப்பகுதிகளில் இருந்து சுமார் 75 சதவீதமான மக்கள் தென்மராட்சிக்கும் வேறு பலஇடங்களுக்கும் இடம்பெயர்ந்து தங்கியுள்ளனர். (எ-117)

## விஸ்தாரம்

என்ன அறிவழகா? இண்டைக்கும் பாண் கியூவிலை நிற்கத்தான் நேரத்தோடை வந்திருக்கிறீரோ...?!

நேற்றைக்குத் தான் பாண் கியூவைப்பற்றியும், பாணைப் பற்றியும் கொஞ்சநேரம் கதைச்சோம்...

பார்த்தியே பாண், மாவிலைகளை அரசாங்கம் இரண்டாம்முறையும் கூட்டிப் போட்டுது. மூண்டு கிழமையுக்குள்ளை இரண்டு தடவை விலை உயர்த்தி இருக்கினம்!

சும்மா சொல்லக்கூடாது... அம்மா சிறிமாவோவை விட மகள் சந்திரிகா இந்த விஷயத்திலை கெட்டிக்காரி தான்!

அப்ப எழுபதிலை, சத்திர மண்டலத்திலை இருந்தாவது அரிசி கொண்டு வந்து தருவேன் எண்டு சொன்ன சிறிமா...

சிம்மாசனத்திலை ஏறி மூண்டு வருஷத்துக்குப் பிறகு தான், மா இறக்குமதியைக் குறைச்சு பாணுக்கு கியூவிலை நிற்க வைச்சா...!

மரவள்ளியையும், வத்தாளையையும் பயிரிட்டுச் சாப்பிடுங்கோ எண்டு சிங்கள மக்களுக்குச் சொன்னா.

இப்ப, மகள் சந்திரிகா, ஆட்சிக் கதிரையில் ஏறின ஒரு வருஷ காலத்திலையே மா, பாண் விலைகளை ஏத்திக் கொண்டு வாறா.

சிங்கள நாட்டு அரசியலை ஒரு காலத்திலை அரிசி தான் நிர்ணயிச்சு வந்தது. இப்ப கோதுமை மாவும் அதிலையிருந்து தயாரிக்கப்படும் பாணும் அரசியலில பெரும் பங்கு வகிக்கின்றன.

தெற்கிலை அரிசி அதிகளவிலை தேங்கிக் கிடக்குதாம். அதனாலை விவசாயிகள் தங்கட நெல்லை நியாய விலையில் விற்க முடியாமல் கஷ்டப்படுகினமாம். அவையளுக்கு உதவி செய்வதற்காகத்தான், விவசாயத்தை ஊக்குவிக்கிறத்துக்காகத்தான் மா, பாண் விலைகள் உயர்த்தப்படுவதாக அரசாங்கம் சொல்லுது ... அது கால் உண்மைதான் ...

அமெரிக்கா பி. எல். 480 எண்ட கடன் உதவி ஒப்பந்தத்தின் கீழ் தான் ஸ்ரீலங்காவுக்கு கோதுமை மாவை விற்குது. அந்தக் கடனுதவி வழியாலை கிடைச்ச நூறு கோடி ரூபாவிலை 80கோடி ரூபாவை எங்கடை தமிழ் மண்ணை ஆக்கிரமிக்கிற ஆக்கிரமிப்புப் போருக்குச் சந்திரிகா செலவிட்டுள்ளார். அதனை அரைவாசி கால்வாசியாவது சரிக்கட்டத்தான் இந்த விலை உயர்வுகள் பாருங்கோ!

உள்ளதைச் சொல்ல வேணும் தம்பி. அந்த மகாவலி திசை திருப்புத் திட்டத்துக்குப் பிறகு சிங்களப் பகுதியிலை விவசாயம் நல்லா வந்திட்டுது. மெத்த முன்னேறியிட்டுது.

எங்கடை பகுதியிலை அரிசி உற்பத்தியை கூட்டுற தக்க வசதி இருக்குமாயிருந்தால், அரிசிப் பாவனையை அதிகமாக பழக்கத்துக்குக் கொண்டுவரலாம் பாருங்கோ ..

பாண் தட்டுப்பாடு வந்த பிறகு அரிசி இடிக்காத வீடுகளிலை எல்லாம் சனி, ஞாயிறு,கிழமை நாள் எண்டு ஒரே மா இடியல் தான்!

உமக்குத் தெரியுமோ என்னவோ, அண்டைக்கு ஞாயிற்றுக்கிழமை வலிகாமம் மேற்கிலை ஆமிக்காரர் ஷெல் அடிக்கிற நேரத்திலை பல வீடுகளிலை (அரிசி) மா இடியல் வேலை அமளியாக நடந்து கொண்டிருந்ததாம்...

ஷெல்லுக்குப் பயந்து பயந்தும் சில பேர் மா இடிச்சு முடிஞ்ச பிறகு தான் இடம் பெயர்ந்திருக்கினம் ... பார்த்தீரே...?

— கொண்கோடி.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

யாழ்ப்பாணம் மாட்டின் ஒழுங்கையில் சகல வசதிகளும் கொண்ட வீட்டுடன் (1½) ஒன்றரை பரப்பு காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: வி. இந்திரா, இல. 10, மாட்டின் ஒழுங்கை, யாழ்ப்பாணம். (39046)

### விஷேச அன்ரனா

ரூபவாஹினி, மட்றாஸ் நிகழ்ச்சிகளுக்கு அன்ரனா பொருத்துவதற்கும், வீடியோ கமரா, ரி. வி. டெக், றேடியோக்கள், மணிக்கூடுகள் திருத்துவதற்கும் வீனஸ் டிங்கா வாச் அன் றேடியோ வேக்ஸ், 284, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். கிளை: பஸ் நிலையம், சாவகச்சேரி (சி-1434)

### சோதிடம்

ஜாதகம் கணித்த கல்வி, தொழில், திருமணம் எதிர்கால பலன் அறிய இல. 361, பருத்தித்துறை வீதி, நல்லூர். (39048)

### வணிகபுள்ளி விபரவியல்

வெளிவந்து விற்பனையாகின்றன A/L புதிய பாடத்திட்டத்திற்குரியது. ரூபா 250/- யாழ்ப்பாண புத்தக நிலையம், 448, மருத்துவமனை வீதி, யாழ்ப்பாணம். (சி-1739)

## தபால்களை எடுத்துச் செல்ல ஏற்பாடு

இன்று பருத்தித்துறை வரும் 'ஹபறண' கப்பலில் வெளியூர் தபால் பொதிகள் அனுப்பி வைப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதற்கு ஏற்றவாறு வெளியூர் தபால்களை தபால் பெட்டிகளில் சேர்க்குமாறு யாழ் பிரதம தபாலதிபர் திரு க கோடீஸ்வரன் கேட்டுள்ளார். (இ-4)

## ஓய்வூதியம் வழங்கப்படுகிறது

தென்மராட்சி ஒக் 18

அச்சுவேலி ப. நோ. கூ. சங்க கிராமிய வங்கியில் ஓய்வூதியம் பெறுபவர்களின் அக்டோபர் மாத ஓய்வூதியம், மட்டுவில் கனகன்புளியடியில் தற்காலிகமாக இயங்கும் கிராமிய வங்கியில் வழங்கப்பட்டு வருவதாக சங்கத் தலைவர் தெரிவித்தார். (எ-117)

## உழவு இயந்திரம் ஏறி வயோதிபர் படுகாயம்

யாழ்ப்பாணம் ஒக் 18

ஓடிக் கொண்டிருந்த உழவு இயந்திரத்தில் இருந்து கீழே விழுந்து, அந்த இயந்திரமே உடலுக்கு மேலால் ஏறிய நிலையில் படுகாயங்களுடன் வயோதிபர் ஒருவர் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இடம்பெயர்ந்து கனகம்புளியடியில் வசிக்கும் பொன்னம்பலம் முத்துக்குமாரு (வயது 76) என்பவரே இவ்வாறு படுகாயமடைந்தவர் ஆவர்.

தெல்லிப்பழையைச் சேர்ந்த இவர் இடம்பெயர்ந்து சிறுப்பிட்டியில் தங்கியிருந்தார்; பின்னர் மீண்டும் இடம்பெயர்ந்து கனகம்புளியடியில் வசிக்கிறார்.

இவர் சிறுப்பிட்டியில் உள்ள தனது உடமைகளை ஏற்றி வந்த போதே இந்த விபத்து ஏற்பட்டது என தெரிவிக்கப்பட்டது. (இ-எ-15)

# பனம் பொருள் பண்ட உற்பத்தி பயிற்சிக்கு ஆயிரம் பேர் தெரிவாவர்

யாழ்ப்பாணம், ஒக். 18

வட தமிழீழத்தில் இருந்து ஆயிரம் பேரைத் தெரிவு செய்து அவர்களுக்கு பனை வளத்தில் இருந்து உணவுப் பண்டங்களை உற்பத்திசெய்ய பயிற்சி வழங்கப்படஉள்ளது.

இதற்கான நடவடிக்கைகளை தமிழீழப் பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் பனை தென்னைவள அபிவிருத்திப் பகுதியினர் மேற்கொண்டு வருகின்றனர்.

பயிற்சியாளர்கள் வடதமிழீழத்தின் ஐந்து மாவட்டங்களிலும் உள்ள கிராமிய உற்பத்திக் குழுக்கள் ஊடாக தெரிவு செய்யப்படுவர்

இவர்களுக்கு பனையில் இருந்து பெறப்படும் மூலப் பொருட்களைக் கொண்டு பனாட்டு, ஒடியல், மற்றும்ஒடியல்சார் உணவுகளைத் தயாரிப்பதற்கான பயிற்சிகள்வழங்கப் படும்.

மூன்றாம் கட்ட ஈழப்போர் ஆரம்பிக்கப்பட்டுள்ள இந்த வேளையில், இலங்கை அரசால் வலுவாகத் திணிக்கப் பட்டுள்ள பொருளாதாரத் தடையை எதிர்நோக்கி நிலவக் கூடிய உணவுப் பற்றாக் குறையை ஈடு செய்ய இந்த நடவடிக்கை உதவும் என பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினர் நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, இந்த ஆண்டு மக்கள் தாமாகவே உற்பத்தி செய்த தரமான பனாட்டு ஒடியல் போன்றவற்றை பனை அபிவிருத்திச்சபை கொள்வனவு செய்ய உள்ளதாகவும் அறிவிக்கப்பட்டது.

## துப்பாக்கிச் சூடு: குடும்பப் பெண் படுகாயம்

யாழ்ப்பாணம், ஒக். 18

இராணுவத்தின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி ஊரெழு வடக்கில் குடும்பப் பெண் ஒருவர் படுகாயமடைந்தார்.

பகலில் தமது இருப்பிடங்களில் இருந்து விட்டு இரவு வேறிடங்களுக்கு சென்று தங்கி வந்த அப்பகுதி மக்களில் ஒருவரான தர்மலிங்கம் புவனேஸ்வரி (வயது 31) என்ற குடும்பப் பெண்ணே படுகாயமடைந்தவராவார்.

நேற்று முன்தினம் மாலை 6-30 மணிக்கு வீட்டில் இருந்து புறப்பட ஆயத்தமான வேளையே துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கானார்.

படுகாயமடைந்தவர் யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்டுள்ளார். (எ-15)

## DIPLOMA IN COMPUTER PROGRAMMING

BASIC 2x33 LANGUAGE

ஆரம்பம்: 21 - 10 - 1995

★ சிறந்த விரிவுரையாளர் குழு

★ கூடிய செய்முறைப் பயிற்சியும் தவணை முறைக் கட்டண வசதியும்.

★ சிறந்த மாணவர்களுக்கு மூன்று மாத காலம் இலவச உள்ளகப் பயிற்சி அளிக்கப்படும்.

விபரங்களுக்கு:

**NORTH CEYLON TECHNICAL INSTITUTE**

14 st. Peter's Lane,
Jaffna.

(சி-2474)

## அச்சுவேலி ப. நோ. கூ. ச: $1\frac{1}{2}$ கோடிக்கு மேல் இழப்பு

தென்மராட்சி, ஒக் 18

அண்மைக் கால இராணுவ நடவடிக்கைகளால் அச்சுவேலி ப. நோ. கூ. சங்கத்திற்கு ஒரு கோடியே 58 லட்சத்து ஆயிரத்து முன்னூற்றி நாற்பத்து ஒன்பது ரூபா நஷ்டம் ஏற்பட்டுள்ளதாக சங்கத் தலைவர் ந. ந. பேரின்பநாயகம் தெரிவித்தார். இதில் சங்கக் கட்டட ரீதியான இழப்பு சேர்க்கப்படவில்லை.

காசு, பொருள் இழப்பாக 68 லட்சம் ரூபாவும், நிவாரணப் பொருள் இருப்பாக 9 லட்சத்து 29 ஆயிரம் ரூபாவும் தளபாட மற்றும் இணைப்புகளாக 89 லட்சத்து 26 ஆயிரத்து 849 ரூபாவும் காகிதாதிகளாக 5 இலட்சத்து 30 ஆயிரம் ரூபாவும், அலுவலக இயந்திர உபகரணங்களாக 3 லட்சத்து 500 ரூபாவும், மோட்டார் வாகனத்தால் 4 லட்சத்து 14 ஆயிரம் ரூபாவும், மாணவர் உணவு முத்திரையால் 16 லட்சம் ரூபாவும், அலுவலக இரும்புப் பெட்டியில் வைக்கப் பட்டிருந்த கையிருப்பு பணம் மற்றும் காசோலைகளாக 8 லட்சம் ரூபாவும் இழக்கப்பட்டுள்ளதாக மதிப்பிடப் பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (எ-117)

## பார்வை இழந்தோரும் வெள்ளைப் பிரம்பும்

We Serve

அமெரிக்காவின் பிரியோரியா லயன்ஸ் கழகத்தினர் 1930 ஆம் ஆண்டு வெள்ளைப் பிரம்பை பார்வை இழந்தோரின் அடையாளமாகப் பிரகடனப்படுத்தினர். இன்று வெள்ளைப் பிரம்பு எல்லா நாடுகளினாலும் சட்ட ரீதியாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. ஒக்ரோபர் 15 ஆம் திகதி அனைத்துலக வெள்ளைப் பிரம்பு தினமாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. கீழ்க்காணும் விவரங்கள் சட்டமாயினும் அன்புடனும் மனித நேயத்துடனும் செய்யப்படுவதையே விழிப்புலனற்றோர் விரும்புவர்.

— வெள்ளைப் பிரம்பு இவரை இனம் காட்டுவதுடன் வழியைக் காட்டும் விழியாகவும் செயற்படுகின்றது.

— வெள்ளைப் பிரம்புடன் வீதியில் வருபவருக்கு மற்றவர் எல்லோரும் இடையூறு செய்யாமல் முன்னுரிமை வழங்கி உதவ வேண்டும்.

— அவர் வீதியைக் கடக்க முற்பட்டால் சகல வாகனங்களும் நின்று அவருக்கு வழிவிட வேண்டும்.

— அவர் எதிர்பாராத ஆபத்து பாதையில் காணப்பட்டால், அருகில் உள்ளவர் தாமாகவே அவருக்கு அதைத் தெரியப்படுத்த வேண்டும்.

— அவர் தயங்கினால் அல்லது கையைக் காட்டினால் அருகில் சென்று விசாரித்து உதவ வேண்டும்.

— பொது வாகனங்கள் அவரை ஏற்றிச் சென்று அவர் கூறிய இடத்தில் இறக்கி விட வேண்டும்.

★ உங்களுக்குத் தெரிந்த எவராவது விழிப்புலன் இழந்து வீட்டினுள் முடங்கிக் கிடந்தால் அவருக்கு வெள்ளைப் பிரம்பைக் கொடுத்து வெளியே கொண்டு வரவேண்டும். வாழ வழி காட்ட அண்மையிலுள்ள லயன்ஸ் கழகத்துடனோ அல்லது விழிப்புலனற்றோர் சங்கத்துடனோ தொடர்பு கொள்ளவும்.

★ விழியை இழந்தவர் மனிதத்தை இழக்கவில்லை. உள்ளமும் உடலும் உழைக்கும் உறுதியும் எல்லோரையும் போல் இவரிடமும் உண்டு.

யாழ். லயன்ஸ் கழகம்.

குறிப்பு:

சர்வதேச வெள்ளைப் பிரம்பு தினத்தைக் குறிக்கும் முகமாக இன்று மாலை 2-30 மணியளவில் யாழ் லயன்ஸ் கழகத்தினரும் விழிப்புலனற்றோர் சங்கமும், லியோக் கழகங்களும் இணைந்து யாழ் நகரில் நடத்த உள்ள ஊர்வலத்தில் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அழைக்கின்றோம்.

(சி-2486)

## 2x17.5 விசேஷ அன்ரனா

ரூபவாஹினி, மட்றாஸ் நிகழ்ச்சிகளுக்கு அன்ரனா பொருத்துவதற்கும்,

வீடியோ கமரா, ரி வி. டெக், றேடியோக்கள், மணிக்கூடுகள் திருத்துவதற்கும்

**வீனஸ், டிங்கா வாச் & றேடியோ வேக்ஸ்**

284, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

கிளை: பஸ் நிலையம், சாவகச்சேரி.

Our Qualified Experienced Technical & Tutorial Staff

**T. Thanabalasingam** B. Sc. (Ceylon)
Dip - in Electronic Engineering (Lond)
(Specialist in V. C. R. Service)

(சி-2489)

நல்லூர்

## ஸ்ரீ சட்டநாதர் சிவன் கோவில்

(நல்லைநாதசுவாமி)

## கேதார கௌரி விரதம்

எதிர்வரும் 23 - 10 - 1995 ஆம் திகதி திங்கட்கிழமை (தீபாவளித் திருநாள்) காலை 9-00 மணிக்கு அம்பிகைக்கு விசேட அபிசேக ஆராதனை இடம் பெற்று கௌரி அம்பாள் சிவலிங்கப் பெருமானை பூஜித்த வண்ணம் கைலாச வாகனத்தில் வீதிவலம் வருவார். இதனைத் தொடர்ந்து கௌரிவிரதம் அனுஷ்டிக்கும் அடியார்களுக்கு கௌரிக்காப்பு வழங்கப்படும்.

குறிப்பு:

பெட்டிக்காப்பு, தனிக்காப்பு பெற்றுக்கொள்ள விரும்பும் அடியார்கள் முன் கூட்டியே ஆலய காசாளருடன் தொடர்பு கொண்டு பெயர்களைப் பதிவு செய்யும் வண்ணம் வேண்டப் படுகின்றீர்.

இங்ஙனம்
ஆலயபரிபாலனசபை.

(39047)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யுத்தம் இறுதிக் கட்டத்தை அடைந்துள்ளது

## ஜெரி கூறுகிறார்

கொழும்பு, ஒக். 18

புலிகளுக்கு எதிரான போர் இறுதிக் கட்டத்தை அடைந்து விட்டது.

இவ்வாறு இராணுவத் தளபதி லெப். ஜெனரல் ஜெரிடி சில்வா தெரிவித்துள்ளார். பலம் முழுவதையும் பிரயோகித்து யுத்தம் செய்யுமாறும் அவர் கோரிக்கை விடுத்திருப்பதாக வெரித்தாஸ் வானொலி தெரிவித்தது.

இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் சரத் முனசிங்கா தென்மராட்சியில் வலி. கிழக்கில் ஆரம்பிக்கப்பட்ட இடிமுழக்கத் தாக்குதல் இராணுவ நடவடிக்கை முடிவடையும் கட்டத்தை அடைந்திருப்பதாகத் தெரிவித்தார். விடுதலைப் புலிகளைத் தோற்கடிக்கும் வரை போர் தொடரும் என்றும் அவர் கூறினார்.

இராணுவத்துக்கு பெரும் அளவு பணம் செலவிடப்படுவதாகவும் ஓர் ஆட்லறி ஷெல்லுக்கு 40 ஆயிரம் ரூபா செலவாவதாகவும் அவர் தெரிவித்தார். [இ]

## அமெரிக்க ஆதரவு குறித்து பீரிஸ்

கொழும்பு, ஒக். 18

ஸ்ரீலங்கா அரசால் முன் வைக்கப்பட்டுள்ள அரசியல் வரவலாக்கல் யோசனைகளுக்கு அமெரிக்க அரசு தனது பூரண சம்மதத்தை தெரிவித்துள்ளது என்று அரசமைப்பு விவகார அமைச்சர் பேராசிரியர் ஜி. எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

இதற்கு உலக வங்கியும் நிதி நிறுவனங்களும் ஒத்துழைப்பு வழங்க முன் வந்துள்ளன என்றும் அவர் கூறினார். (இ-3)

# தற்காலிக பணியாளர் வேலையிலிருந்து நிறுத்தம்

தென்மராட்சி, ஒக். 18

வலி. கிழக்கு வடக்குப் பகுதி (அச்சுவேலி) பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் தற்காலிக பணியாளர்களாக பணிபுரிந்த அனைத்து ஊழியர்களும் வேலையிலிருந்து இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளனர்.

சங்கத்தின் நிதி நிலைமை சீரானதும் இவர்கள் மீண்டும் வேலைக்குச் சேர்த்துக் கொள்ளப்படுவார்களென சங்கத் தலைவர் தெரிவித்தார்

சங்கத்தின் 25 கிளைகள் தற்போது தென்மராட்சிப் பகுதியில் ஏழு தற்காலிக கிளைகளில் இயங்கி வருவதாகவும் அவர் தெரிவித்தார். (இ-116)

# 6 ஆயிரத்து 80 குடும்பங்கள் உலர் உணவு பெற்றன

தென்மராட்சி, ஒக். 18

இடிமுழக்க நடவடிக்கைகளால் இடம்பெயர்ந்து தென்மராட்சிப் பகுதியில் நலனோம்புநிலையங்கள் தவிர்ந்த ஏனைய இடங்களில் தங்கியுள்ள குடும்பங்களில் நேற்று நண்பகல் வரை 6 ஆயிரத்து 80 குடும்பங்களைச் சேர்ந்த 22 ஆயிரத்து 827 பேருக்கு ஒரு வார கால உலர் உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டன.

கொடிகாமம், சாவகச்சேரி, கைதடி ஆகிய ப. நோ. கூட்டுறவுச் சங்கக் கிளைகள் மூலம் இவ் உலர் உணவு வழங்கப்பட்டதாக பிரதேச செயலக புள்ளி விவரங்களில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒரு வார உலர் உணவுப் பொருள்கள் வழங்குவது நேற்றுடன் நிறுத்தப்பட்டு விட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. [ஐ-117]

# தீவுப்பகுதியில் உள்ள ஈ. பி. டி. பி. உறுப்பினருக்குப் நவீன ஆயுதம்

கொழும்பு, ஒக். 18

ஈ. பி. டி. பி. தலைவர் டக்ளஸ் தேவானந்தா ஊர்காவற்றுறையிலும் மற்றும் தீவுகளிலும் உள்ள ஈ. பி. டி. பி. உறுப்பினர்களுக்கும் நவீன ஆயுதங்களைக் கோரியுள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவைச் சந்தித்த போது இந்த கோரிக்கை விடுக்கப்பட்டது.

இவற்றுள் விமானங்களைச் சுடக்கூடிய திறன் உள்ளதும்— இரவில் பார்க்கக் கூடிய சாதனங்கள் பொருத்தப்பட்டுள்ளதுமான 50 கலிபர் போன்ற கனரக ஆயுதங்களையும் ஈ. பி. டி. பி. தலைவர் கோரியுள்ளார்.

ஜனாதிபதியுடனான சந்திப்பின் போது ஈ. பி. டி. பி. நாடாளுமன்ற உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.

1990 ஆம் ஆண்டு இரண்டாவது ஈழ யுத்தம் ஆரம்பமான பின்னர் ஈ. பி. டி. பி. யினர் அரசுக்கு ஆதரவு அளிக்க இணங்கியதை அடுத்து அப்போதைய பாதுகாப்பு அமைச்சர் ரஞ்சன் விஜேரத்ன ஆயுதங்களை வழங்கினார் என்பது குறிப்பிடத்தக்கது.

இதே போன்று புளொட், ரெலோ ஆகிய தமிழ்க் குழுக்களுக்கும் ஆயுதங்கள் வழங்கப்பட்டிருந்தன. (இ)

## தென்மராட்சியில் தங்கியுள்ள

# வலிகாமம் மக்களுக்கு புதிய அனுமதி பத்திரங்கள்

## 'இ' பங்கீட்டு அட்டை முத்திரை ரத்து

தென்மராட்சி, ஒக். 18

இடிமுழக்க நடவடிக்கைகளால் இடம் பெயர்ந்து தென்மராட்சிப் பகுதியில் தங்கியுள்ள வலிகிழக்கு வடக்குப் பகுதியைச் சேர்ந்த 'இ' பங்கீட்டு அட்டை வைத்திருப்போருக்கு வழங்கப்பட்ட முத்திரைகள் இரத்துச் செய்யப்பட்டுள்ளதாகவும் — அதற்குப் பதிலாக கோப்பாய் பிரதேச செயலரினால் புதிய அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்பட்டு வருவதாகவும்— பிரதேச செயலர் திரு. க. கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

உலர் உணவு பங்கீட்டு அட்டை தவற விட்டவர்களுக்கு புதிய மாற்று (Duplicate) அட்டைகளும் தற்போது வழங்கப்படுகின்றன.

உணவு முத்திரை, பாலமா முத்திரை, பாடசாலை மாணவர் முத்திரை ஆகியவற்றை தவற விட்டவர்களுக்கு அவற்றை வழங்க மாற்று நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டு வருவதாகவும் அவ தெரிவித்தார்.

# கிளிநொச்சியில் மிகக் குறைந்த நிலப்பரப்பிலேயே விவசாயம்

யாழ்ப்பாணம் ஒக். 18

கிளிநொச்சி மாவட்டத்தில் தற்போது விவசாயம் செய்வதற்குரிய காலம் எனினும் விவசாயிகள் விவசாயம் செய்வதற்குரிய ஏற்பாடுகளை மேற்கொள்ளாதுள்ளனர்.

கிளிநொச்சி விவசாயப் பண்ணை முகாமையாளர் இதுபற்றிக் குறிப்பிடுகையில், கடந்த வருடம் கிளிநொச்சியில் மட்டும் இருபத்தையாயிரம் ஏக்கர் நிலப்பரப்பில் விவசாயம் மேற்கொள்ளப் பட்டதாகவும்—

இவ் வருடம் ஐந்தாயிரம் ஏக்கர் நிலம் கூட இன்னமும் விவசாயத்திற்கு பண்படுத்தப் படவில்லை என்றும் — தெழிவித்தார்

மண்ணெண்ணெய் உரம் முதலியனவற்றுக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாடே இதற்குக் காரணம் என அவர் தெரிவித்தார். [இ-20]

# பூந்தமல்லி சிறை பாதுகாப்பு திருப்தி

## உள்துறை செயலர் தெரிவிப்பு

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் குற்றம் சாட்டப்பட்டுள்ளவர்கள் காவலில் வைக்கப்பட்டுள்ள பூந்தமல்லி சிறையின் பாதுகாப்பு குறித்து மத்திய உள்துறை செயலர் கே. பத்மநாதஐயா திருப்தி வெளியிட்டுள்ளார்.

திரு. பத்மநாதஐயா நேற்று முன்தினம் பூந்தமல்லி சிறையின் பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து நேரில் வந்து பார்வையிட்டார்.

ராஜீவ் கொலை வழக்கு தொடர்பாக விசாரணை செய்து வரும் சிறப்பு நீதிமன்றமும் பூந்தமல்லி சிறை கட்டடத்திலேயே செயல்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. [எ-3]

# விழிப்புலனற்றோரின் வெள்ளை பிரம்பு மனிதாபிமானத்தை தட்டும் சின்னம்

## விழிப்புலனிழந்தோர் சங்கத் தலைவர் தெரிவிப்பு

சாவகச்சேரி, ஒக். 18

விழிப்புலனற்றோர் தம்முடன் எடுத்துச் செல்லும் வெள்ளைப் பிரம்பானது மனிதர்களின் மனிதாபிமான உணர்வை தட்டியெழுப்பும் ஓர் சின்னமாகும்.

இவ்வாறு யாழ். விழிப்புலனிழந்தோர் சங்கத் தலைவர் திரு. ஆ. ரவீந்திரன் சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் கடந்த ஞாயிறு இடம்பெற்ற சர்வதேச வெள்ளைப் பிரம்பு தினத்தில் கலந்துகொண்டு உரையாற்றியபோது குறிப்பிட்டார்.

இதனை லயன்ஸ் கழகங்கள் வலய ரீதியாக ஒழுங்கு செய்திருந்தன.

திரு. ரவீந்திரன் விழிப்புலன் இழந்தவர்; பட்டதாரி; யாழ். கனகரத்தினம் மகா வித்தியாலய ஆசிரியர்.

திரு. ரவீந்திரன் தொடர்ந்து உரை நிகழ்த்துகையில் கூறியதாவது:-

பாடசாலை மாணவர்களை வெள்ளைச் சீருடை மூலம் இனம் காண்பது போல விழிப்புலன் இழந்தவர்களை அவர்கள் தம்முடன் வைத்திருக்கும் வெள்ளைப் பிரம்பின் மூலம் இலகுவாக இனங்காணலாம்.

வீதியில் செல்லும் விழிப்புலனிழந்தவர்களை வெள்ளைப் பிரம்புடன் காணும் போது அவர்களுக்கு இடையூறின்றி மக்கள் நடந்து கொள்ள வேண்டும் முடிந்த உதவிகளை அவர்களுக்குச் செய்ய வேண்டும்.

இத்தினத்தை கொண்டாடுவதன் மூலம் பொதுமக்கள் விழிப்புலன் இழந்தவர்களைப் பற்றி அறிய வேண்டும். சமுதாயம் கண்பார்வை அற்றவர்களுக்கு உதவ வேண்டும்.

வெள்ளைப் பிரம்பு தினம் போன்ற தினங்களை கொண்டாடினால் மட்டும்போதாது; விழிப்புலனற்றவர்களது வாழ்க்கையை மேம்படுத்த தொழிற் திட்டங்கள் வாழ்வுத் திட்டங்களை அமைக்க வழி செய்தல் வேண்டும்.

விழிப்புலனற்றவர்களுக்கு வேண்டிய கணித பாட உபகரணங்கள் பல்வேறு கல்வி சார் பொருள்கள் மற்றும் அவர்களுக்கு தேவையானவற்றை வழங்கி உதவ இந்த சமுதாயம் முன்வர வேண்டும்.

இவர்கள் சுயதொழில் மூலம் வாழ்வை மேம்படுத்த உதவிகளை வழங்க வேண்டும்.

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

இந்த நிகழ்வு வலயத் தலைவர் எஸ். தங்கராசா தலைமையில் நடைபெற்றது.

கூட்ட ஆரம்பத்தில் சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் இருந்து லயன்ஸ் லியோ கழகத்தைச் சேர்ந்த உறுப்பினர்கள் பொதுமக்கள் ஆகியோரால் விழிப்புலனற்றோர் மலர்மாலை அணிவித்து ஊர்வலமாக சாவகச்சேரி பிரதான வழியாக சாவகச்சேரி இந்துக் கல்லூரிக்கு அழைத்து வரப்பட்டனர்.

இந் நிகழ்வில் தென்மராட்சி பிரதேச செயலர் பு. சுந்தரம் பிள்ளை, கைதடி நவீல்ட் பாடசாலை அதிபர் கே. கோபாலகிருஷ்ணன், விழிப்புலனற்றவரான எஸ். தம்பிராசா, டாக்டர் எஸ் அருளானந்தம், சாவ லயன்ஸ் தலைவர் ஆகியோர் உரை நிகழ்த்தினர். தொடர்ந்து இசை ஆசிரியர்... சாவகச்சேரிகளும் இடம்பெற்றது.

# யாழ். மத்திய கல்லூரி பழைய மாணவர்களின் கவனத்திற்கு

எமது கல்லூரியில் அமையப் பெற்றிருக்கும் பழைய மாணவர் சங்க அரும் பொருள் அகத்தில் வைத்துப் பேணத்தக்க, கல்லூரியினதும் மாணவர்களினதும் நூல்கள், வெளியீடுகள், பத்திரிகைச் செய்திகள், சான்றிதழ்கள், கல்வி, விளையாட்டுகள் சார்ந்த பொருள்கள், படங்கள் என்பனவற்றையும் ஏனைய வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தனவற்றையும், உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் இருந்து தருவித்து அரும் பொருள் அகத்திற்குத் தந்துதவ மத்தியின் மைந்தர்கள் யாவரும் உதவி செய்ய வேண்டுகிறோம்.

அரசாங்க பாடசாலை என்ற போர்வையில் எமது 179 வருட கால பாரம்பரியத்தில் மாற்றஞ் செய்ய நடவடிக்கை எடுக்க முற்பட்ட போது பழைய மாணவர்களே எமது தாய் அகத்தின் பாரம்பரியத்தைப் பாதுகாத்து வருகின்றனர். ஆகவே தங்கள் ஒத்துழைப்பு மிக மிக அவசியமானது.

இ. ராஜாராம், தலைவர்.

கா. மாணிக்கவாசகர், செயலாளர்.

பழைய மாணவர் சங்கம்

[இ-2493]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன் வெளியீட்டக ஆதரவில்

2×40

யாழ். மிட்-ரவுண் றோற்றறக்ற் கழகம் நடத்தும்

# போலியோ விழிப்புணர்வு ஓவியப் போட்டி

- ★ போலியோ (இளம்பிள்ளைவாதம்) நோயின் ஆபத்துகள்.
- ★ சமூகத்தின் பல மட்டத்தினரிடையே போலியோ நோய் ஏற்படுத்தி உள்ள பாதிப்புகள்.
- ★ தேசிய நோய்த் தடுப்புத் தினங்களை மக்களிடையே பிரபல்யப்படுத்துதல்.
- ★ இந் நோயின் பாதிப்புக்குள்ளானவருக்கான மறுவாழ்வுத் திட்டங்கள்.
- ★ 2,000 ஆண்டளவில் போலியோ நோய் அற்ற உலகை உருவாக்க மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகள்.

இவற்றில் ஒன்றைச் சித்திரித்துக் காட்டுவதாக ஓவியங்கள் அமைய வேண்டும்.

போட்டி பாடசாலை மாணவருக்கும், தனிப்பட்டவர்களுக்குமாக இரு பிரிவுகளாக நடத்தப்படும்.

பாடசாலை மாணவருக்கான போட்டிக்கு வகுப்பு, வயதுக் கட்டுப்பாடு இல்லை.

அதிக எண்ணிக்கையான மாணவர்களை போட்டியில் ஈடுபடுத்தும் பாடசாலைகளுக்கும் பரிசில்கள் உண்டு.

தனிப்பட்டவர்களுக்கான போட்டிக்கும் வயதுக் கட்டுப்பாடு இல்லை.

போட்டிக்கான ஓவியங்களை செயலாளர், யாழ். மிட்-ரவுண் றோற்றறக்ற் கழகம், 83, கோவில் வீதி, நல்லூர் என்ற விலாசத்துக்கு அனுப்பவும். நேரிலும் கையளிக்கலாம்.

ஓவியங்கள் யாவும் 19"X24" அளவுடைய "பிரிஸ்ரல் போர்ட்" அட்டைத் தாளில் வரையப்பட வேண்டும்.

எந்த வர்ணத்தையும் பயன்படுத்தலாம்.

## பரிசு விவரம்

பாடசாலை மாணவர்களுக்கு

1ஆம் பரிசு — ரூபா 1,000/-
2ஆம் பரிசு — ரூபா 750/-
3ஆம் பரிசு — ரூபா 500/-

தனிப்பட்டவர்களுக்கு

1ஆம் பரிசு — ரூபா 1,500/-
2ஆம் பரிசு — ரூபா 1,000
3ஆம் பரிசு — ரூபா 600/-

சிறந்த ஓவியங்களுக்கு ஆறுதல் பரிசில்களும், சான்றிதழ்களும் வழங்கப்படும்.

ஓவியங்களுடன் கீழே உள்ள விண்ணப்பப்படிவமும் இணைத்து அனுப்பப்பட வேண்டும்.

**முடிவு திகதி: 31-10-1995**

உதயன் வெளியீட்டக பணியாளர்களும், யாழ். மிட்-ரவுண் றோற்றறக்ற் கழக உறுப்பினர்களும் போட்டியில் கலந்து கொள்வது தவிர்க்கப்பட்டுள்ளது.

போட்டிக் குழுவின் தீர்ப்பே சகல விடயங்களிலும் இறுதியானது.

## விண்ணப்பப் படிவம்

முழுப்பெயர்: ........................................
விலாசம்: ........................................
........................................
பிறந்த திகதி: ........................................
பால் / வயது: ........................................

பாடசாலை மாணவர்களுக்கு மாத்திரம்

பாடசாலை: ........................................
ஆண்டு: ........................

........................................
மாணவர் கையொப்பம்

இம் மாணவர் எனது பாடசாலையில் மேற்படி வகுப்பில் கல்வி கற்று வருகின்றார் என்பதையும் இந்த ஓவியம் அவரது சொந்தப் படைப்பு என்பதையும் உறுதிப்படுத்துகின்றேன்,

.................... ....................
திகதி அதிபரின் கையொப்பம்

தனிப்பட்ட போட்டியாளர்களுக்கு மாத்திரம்

போட்டி விதிமுறைகளுக்கு இணங்கி வரையப்பட்ட இவ் ஓவியம் எனது சொந்தப் படைப்பு என்பதை உறுதிப்படுத்துகின்றேன்.

.................... ....................
திகதி போட்டியாளரின் கையொப்பம்

ROTARACT CLUB


## விபத்தில் காயமடைந்தவர் மரணம்

யாழ்ப்பாணம், ஒக். 18

கோப்பாய் கைதடி வீதியில் கடந்த 13ஆம் திகதி இடம்பெற்ற பயங்கர பஸ்—சைக்கிள் விபத்தில் படுகாயமடைந்து யாழ். ஆஸ்பத்திரியில் அதி தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டிருந்த ஒருவர் நேற்று முன்தினம் அங்கு மரணமானார்.

இச்சம்பவத்தில் சைக்கிளில் சென்றவரான ஐயம்பிள்ளை பாலசுப்பிரமணியம் (வயது 36) என்பவரே உயிரிழந்தவராவார்.

இவர் பொன்னாலையில் இருந்து இடம்பெயர்ந்து கைதடியில் வசித்து வந்தவர்.

மரணவிசாரணையின் பின் சடலம் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது.

(எ-15-13)

## கமக்காரர் அட்டைக்கு மண்எண்ணெய்

யாழ்ப்பாணம், ஒக். 18

மன்னார் மாவட்டத்தில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினரால் பசுமை வேளாண் சேவை நிலையத்தினூடாகவும் விவசாயிகளுக்கு கமக்காரர் அறிமுக அட்டை மூலம் கட்டுப்பாட்டு விலையில் மண்எண்ணெய் வழங்கப்பட்டு வருகின்றது.

அண்மைக் காலத்தில் இருந்து இத்திட்டத்தின்படி 95ஆம் ஆண்டு சிறுபோக நெற் செய்கையில் ஈடுபடும் விவசாயிகளுக்கு முதற்கட்டமாக கதிர் மிதித்தலுக்கு ஒரு ஏக்கருக்கு 8 லீற்றர் வீதம் மண்எண்ணெய் வழங்கப்பட்டு வருகின்றது. (இ)

## சி. க. கூட்டுறவு சங்கங்களுக்கு

யாழ்ப்பாணம், ஒக். 18

அண்மையில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கைகளினால் இடம்பெயர்ந்துள்ள சி. க. கூட்டுறவுச் சங்கங்கள் தம்முடன் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரிகளை அறிவிக்குமாறு யாழ். மாவட்ட சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்க சமாசம் அறிவித்துள்ளது.

அத்துடன் சங்கங்களுக்கு ஏற்பட்ட சொத்து, பொருள், ஆவண இழப்புகளைத் தெரியப்படுத்துமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. (எ)

## பேக்கரிகளில் பாண் உற்பத்தி நிறுத்தம்

தென்மராட்சி, ஒக். 18

தென்மராட்சிப் பகுதியில் உள்ள 21 பேக்கரிகளில் பெரும்பாலானவை மா இல்லாததால் பாண் உற்பத்தியை நிறுத்தியுள்ளன.

அண்மையில் பிரதேச செயலகத்தினால் வழங்கப்பட்ட மா குறிப்பிட்ட பேக்கரிகளுக்கே வழங்கப்பட்டதால் மா கிடைக்காத பேக்கரிகள் மூடப்பட்டுள்ளதாக தெரிய வருகிறது. [இ-117]

## ஐ. நா. தின போட்டி

தென்மராட்சி, ஒக். 18

சாவகச்சேரி லயன்ஸ் கழகமும் தென்மராட்சி கல்விக் கோட்டமும் இணைந்து கோட்டப் பாடசாலை மாணவர்களிடையே நடத்தும் ஐ. நா. தின வினாடி வினாப் போட்டிகளும் கட்டுரைப் போட்டிகளும் இன்று 18 ஆம் திகதியும் நாளை 19 ஆம் திகதியும் கொடிகாமம் [illegible] வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளன. (இ-119)

# வடக்கு அடக்குமுறைகள் தெற்கிலும் இடம்பெறலாம்

## 'ஹிரு' பத்திரிகை எச்சரிக்கை

கொழும்பு, ஒக். 18

"வடக்கு - கிழக்குப் பகுதிகளில் இலங்கை அரசு மேற்கொள்ளும் அடக்கு முறை நடவடிக்கைகள் எதிர்காலத்தில் தென்இலங்கை மக்களிடமும் பிரயோகிக்கப்படும்"

இவ்வாறு 'ஹிரு' சிங்களப் பத்திரிகை தனது ஆசிரிய தலையங்கச்செய்தியில் நாட்டு மக்களை எச்சரித்துள்ளது.

வடபகுதியில் அரச படைகளால் மக்களின் உயிர்கள் மற்றும் உடமைகள் பறிக்கப்படும் சம்பவங்களை, சட்ட திட்டங்களைப் பயன்படுத்தி அரசு தென் இலங்கை மக்களுக்கு மறைத்து விடுகிறது.

வடக்கு - கிழக்கில் நடைபெறும் இத்தகைய சம்பவங்கள் இனிவரும் காலங்களில் தென் இலங்கையிலும் நடைபெறும்.

தென் இலங்கையில் நடைபெறும் சகல போராட்டங்களையும், வடக்கு-கிழக்கு யுத்தத்தைப் பயன்படுத்தி அரசு திசை திருப்புகிறது.

வடக்கு-கிழக்கு யுத்தத்தை தேசிய யுத்தம் எனக் கூறி அரசு தென் இலங்கை மக்களிடம் அந்த யுத்தத்தைத் திணிக்க முயல்கிறது.

இவ்வாறு அந்த ஆசிரிய தலையங்கத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டது. (இ-எ)

## 31-ம் நாள் நினைவஞ்சலி

2×30



| மண்ணில்: | | விண்ணில்: |
|---|---|---|
| 05 — 02 — 1911 | | 18 — 09 — 1995 |

### திருமதி கி. பிரகாசம்

அன்பான அம்மா!

நீங்கள் எல்லோரையும் நேசித்தீர்கள், உதவி செய்தீர்கள், விசேடமாக உம் பிள்ளைகளின் நல்வாழ்விற்காகப் பல தியாகங்களைச் செய்தீர்கள் அவற்றை நாம் என்றும் மறவோம்.

அன்னாரின் மரணச்சடங்கிற்கு வருகை தந்து மலர் வளையங்கள் சாத்தி, அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், பத்திரிகை வாயிலாக கண்ணீர் அஞ்சலி செலுத்திய சென். ஜேம்ஸ் மகா வித். அதிபர், ஆசிரியர்கள், மாணவர்களுக்கும் எமது நன்றிகள்.

இன்று 18-10-95 பி ப. 4-00மணிக்கு புனித ஆசீர்வாதப்பர் ஆலயத்தில் அன்னாரின் ஆத்ம இளைப்பாற்றிக்காக இரத்தப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

மகன்: யேசுராஜன்,
மருமகள், பேரப்பிள்ளைகள்.

60, ஆசீர்வாதப்பர் வீதி,
யாழ்ப்பாணம்.

(39051)

## 31-ம் நாள் நினைவஞ்சலி



| பிறப்பு: | | இறப்பு: |
|---|---|---|
| 07 — 01 — 1945 | | 18 — 09 — 1995 |

### யோசப் மரியதாஸ் இராசு

(முன்னாள் வீடமைப்பு திணைக்கள ஊழியர்)

விளையாட்டாய் மழலைகள் மொழிகின்றனவென்று
இருந்தோமையா
விதி வந்து விளையாடி விட்டதென அறிந்தோமையா
கதி கலங்கிக் கதறுகிறோமையா
கரிசனை காட்ட யாருமில்லையய்யா
பிஞ்சு நெஞ்சங்கள் இன்று பிரிவால் வாடுகின்றன
உறவென்று இருந்த ஒன்றும் உருமாறிப் போய்
விட்டதே
நட்பென்று இருந்த அன்பன் நினைவு உலரவில்லை
எம் நினைவில்

உம் பிரிவால் துயருறும்;
மனைவி, பிள்ளைகள்.

468, கடற்கரை வீதி,
பாஷையூர்.

[39052]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

292/2 நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.


## ஆக்கிரமிப்பு இலக்கு

வடக்கே போர்க்களத்துக்கு ஆயுத தளபாடங்களை அனுப்புவதற்கு அரசாங்கம் தனக்குள்ள அதிகாரங்களை எப்படி எப்படியெல்லாம் துஷ்பிரயோகம் செய்கிறது என்பது இப்போது வெளிச்சமாகி உள்ளது.

சட்டத்தையும், உரிய ஒழுங்குமுறைகளையும் தனது கையில் எடுத்துக் கொண்டு —

திருகோணமலையில் உள்ள பிறிமா ஆலைக்குச் சொந்தமான இறங்குதுறையையும், கடலில் தரித்து நின்ற தனியார் கப்பல் ஒன்றையும் தனது தேவைக்குப் பயன்படுத்த —

அரசு எவ்வாறு அதிகாரத் தனமாக நடந்திருக்கிறது என்பதனை இப்போது எவரும் புரிந்து கொள்ளலாம்.

தன்னிடம் அதிகாரம் உண்டு என்பதனால் நடைமுறை நியாயத்துக்கும், நீதிக்கும் முரணாக நடந்து கொள்வதற்கு எந்த விடயத்திலும், எப்போதும் அரசு பின்னிற்கப்போவதில்லை என்பதனை மட்டுமன்றி —

யாழ்ப்பாணக் குடாநாட்டு மக்கள் மீதான — வடபகுதி மக்கள் மீதான — போரைத் தீவிரப்படுத்தி, அவர்களை அழித்தொழிப்பதில் எவ்வளவு ஆவேசமாகச் செயற்படுகிறது என்பதனையும் — இச் செயல் காட்டுகிறது.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் தான் நடத்தும் ஆக்கிரமிப்புப் போரினால் மக்களுக்கு உண்டாகும் உயிரழிவுகள் குறித்தோ, அவர்களின் வாழ்க்கை சின்னாபின்னமாக்கப்படுவது குறித்தோ அரசுக்கு எவ்வித கவலையுமில்லை.

இராணுவ பலத்தில் தான் எப்படியாவது மேலோங்கி, தனது ஆக்கிரமிப்புக் குறிக்கோளை அடைந்து விட வேண்டும் என்ற மூச்சுடன் அது செயற்படுகிறது.

வடபகுதித் தமிழ் மக்களின் உயிர்களை மட்டுமன்றி, அவர்களின் வாழ்க்கை அடிப்படைகளையும் அழித்து விட வேண்டும் என்ற இலக்குடனேயே அரசு இராணுவ நடவடிக்கைகளை முடுக்கி விட்டிருக்கிறது.

வாழ்விட வசதி, உணவு, மருத்துவம், சுகாதாரம், கல்வி, தொழில் விருத்தி, உற்பத்தி ஆகிய சகல துறைகளிலும் தமிழ் மக்களின் வாழ்க்கை அடித்தளத்தைப் பலவீனப்படுத்தி விட அரசு திட்டமிட்டுள்ளது.

இவ்வாறு செய்வதன் மூலம் தமிழர்களின் விடுதலைப் போராட்டத்தை இலகுவாக முறியடித்து விடலாம் என்று அது கருதுகிறது.

அதன் பின்னர் அவர்களை அடிமைகளாக்கி, அடிவருடிகளாக மாற்றி விடுவதும் சுலபம் என்று எண்ணியே அரசு இராணுவத் தீர்வை நாடியுள்ளது.

ஒரு மனிதன் ஒடுக்கப்படும் போது, அடக்கப்படும் போது அவனது எதிர்ப்புச் சக்தி வலுவடைகிறது; தீவிரமாகிறது என்பது தான் உளவியல், உடலியல் உண்மைகள்.

இவற்றை உணராமல், தமிழர்களின் கடந்த ஐம்பது வருட கால விடுதலை உணர்வைக் கணக்கில் எடுக்காமல் அல்லது புரிந்து கொள்ளாமல் அவர்களது இருப்பை ஒழிக்க எடுக்கப்படும் முயற்சி ஒரு போதும் வெற்றி தரப் போவதில்லை.

சண்டைகளை வெல்வதால் போரை முடிவுக்குக் கொண்டு வரலாம் என்பதுமல்ல.

# மட்டக்களப்பில் அள்ளிய ஆயுதங்கள்

யாழ்ப்பாணம், ஒக். 18

மட்டக்களப்பில் முன்னேற முயன்ற ஸ்ரீலங்காப் படையினர் மீது விடுதலைப்புலிகள் நடத்திய பெரும் தாக்குதலின்போது கைப்பற்றப்பட்ட ஆயுதங்களின் விவரம் வருமாறு:

| | | |
|---|---|---|
| ★ | ஜி.பி எம் ஜி | 1 |
| ★ | ஏ.கே.எல்.எம்.ஜி. | 2 |
| ★ | பி.கே எல்.எம்.ஜி. | 1 |
| ★ | 3 8 டொங்கான் | 1 |
| ★ | 40 மி.மீ. டொங்கான் | 2 |
| ★ | ஏ.கே. ரக துப்பாக்கிகள் | 18 |
| ★ | பி.கே. ரம்மகளின் | 1 |
| ★ | கிளைமோர் | 4 |
| ★ | ஏ.கே.எல்.எம்.ஜி. ரம்மகளின் | 2 |
| ★ | 60 மி.மீ. ஷெல் | 6 |
| ★ | நேட்டோ ரவை லிங்குடன் | 28 |
| ★ | கைக்குண்டு | 11 |
| ★ | ஏ.கே. மகஸின் | 54 |
| ★ | பரா லைட் | 2 |
| ★ | 40 மி.மீ. ஷெல் | 11 |
| ★ | பி.கே. லிங்குடன் ரவை | 500 |
| ★ | பி.கே. லிங் | 700 |
| ★ | கிளைமோர் வெடிக்கவைக்கும்கருவி | 4 |
| ★ | ஏ.கே.எல்.எம்.ஜி லிங்குடன் ரவை | 925 |
| ★ | ஐ.எம் ரவை | 1625 |
| ★ | பில் பைக் மோட்டார் சைக்கிள் | 6 |

(ஓ-3)

## வீரவணக்கக் கூட்டமும் வித்துடல்கள் விதைப்பும்

யாழ்ப்பாணம், ஒக். 18

கடந்த 8 ஆம் திகதியன்று ஸ்ரீலங்கா இராணுவத்தினரின் 'இடிமுழக்கத் தாக்குதல்' நடவடிக்கையை எதிர்த்துத் தாக்கிய போது மூண்ட பெரும் சண்டையில் வீரச்சாவைத் தழுவி வித்துடல்கள் கிடைக்கப் பெறாத 14 மாவீரர்களின் திருவுருவப்படங்களும் —

நேற்று ஸ்ரீலங்கா இராணுவம் வலிகாமம் கிழக்குப் பகுதியில் முன்னேற முயன்றவேளை தடுத்து நிறுத்தமேற்கொண்ட சமரில் வீரச்சாவைத் தழுவிக் கொண்ட பத்து மாவீரர்களின் வித்துடல்களும் —

இன்று புதன்கிழமை காலை 9 மணியிலிருந்து அவரவர் இல்லங்களிலிருந்து கல்வியங்காடு செங்குந்தா இந்துக் கல்லூரிக்கு எடுத்துச் செல்லப்பட்டு மக்களின் இறுதி வீரவணக்கத்திற்காக மாலை 4 மணியளவில் அங்கு வைக்கப்படும்.

பின் மாலை 5-00 மணியளவில் நடைபெறும் இறுதி வீரவணக்கக் கூட்டமும் நிறைவுற அங்கிருந்து அணிவகுப்பு மரியாதைகளுடன் கோப்பாய் மாவீரர் துயிலுமில்லத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

அங்கு இறுதி இராணுவ மரியாதைகளின் பின்னர் வித்துடல் புனித விதைகுழிகளில் விதைக்கப்பட வித்துடல்களில்லாத மாவீரர்களின் நினைவுக்கற்கள் நடப்படும். (ஓ)

### படையினரின்....

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

படை அதிகாரிகள் உட்பட ஏழு கடற்படையினரும் இரு கப்பல் சிப்பந்திகளும் இச்சம்பவத்தில் பலியாகினர். ஒன்பது கடற்படையினர் படுகாயமடைந்தனர்.

தீவிர பாதுகாப்பு மற்றும் கண்காணிப்புக்கு உட்படுத்தப்பட்டுள்ள திருகோணமலைத் துறைமுகத்தினுள் ஊடுருவிய மூன்று கடற்கரும்புலிகளே இத் துணிகரத் தாக்குதலை நடத்தியதாக முதலில் கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

### மட்டக்களப்பிலும்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கைப்பற்றினர்.

செங்கலடி இராணுவ முகாமிலிருந்து ஆறு பவள் கவச வாகனங்கள் சகிதம் கரடியனாறு காட்டுப்பகுதியை நோக்கி முன்னேற முயன்ற ஐநூறுக்கும் அதிகமான இராணுவத்தினரையும் அதிரடிப் படையினரையும் பூமாஞ்சோலை என்ற இடத்தில் வைத்து விடுதலைப் புலிகள் வழிமறித்துத் தாக்கினர்.

புலிகளின் தாக்குதலை அடுத்து படையினர் தப்பியோட ஆரம்பித்தனர் என்றும் —

செங்கலடி கறுத்தப்பாலம் வரை படையினரை விரட்டி விரட்டி புலிகள் தாக்கினர் என்றும் அறிவிக்கப்பட்டது. சுமார் மூன்றரை மணிநேரம் நடைபெற்ற இச்சண்டையில் 16 போராளிகள் வீரச்சாவடைந்தார்கள். களப்பலியான இப்போராளிகளின் விவரம் இச்செய்தி அச்சுக்குப் போகும் வரை கிடைக்கவில்லை.

## தென்மராட்சி மட்டுவிலிலும் நேற்று ஷெல்கள் வீழ்ந்தன

சாவகச்சேரி, ஒக். 18

நேற்று ஸ்ரீலங்கா இராணுவம் ஏவிய ஷெல்கள் தென்மராட்சியில் — மட்டுவில் பகுதியிலும் விழுந்துள்ளன.

மட்டுவில் கல்வத்தி சிவன் கோயிலின் பின்புறமாக — வயல் நிலத்தில் இரு ஷெல்கள் வீழ்ந்தன. ஆனால் அவை வெடிக்கவில்லை.

வெடிக்காத அந்த ஷெல்கள் போராளிகளால் எடுத்துச் செல்லப்பட்டன என்று

(8 ஆம் பக்கம் பார்க்க)

## வலி. மேற்கில் இரவு வேளை விமானம் சுற்றி நோட்டம்

வலிகாமம் மேற்குப் பகுதிகள் முழுவதையும் திங்கட்கிழமை இரவு 9.30 மணி தொடர்க்கம் விமானம் ஒன்று பல தடவைகள் சுற்றிச் சுற்றி வட்டமிட்டது.

இதனால் வட்டுக்கோட்டை, மாவடி, ஆகிய பகுதிகளில் ஆலயங்களில் தஞ்சமடைந்திருந்த மக்கள் பதற்றம் அடைந்தனர்.

வட்டுக்கோட்டை அடைக்கலம் தோட்ட கந்தசாமி கோவில், மாவடியிலுள்ள காரைநகர் யாழ்ற்றன் கல்லூரி, சங்கரத்தை பத்திரகாளி அம்மன் கோவில் ஆகிய இடங்களில் இருந்த இடம் பெயர்ந்தமக்களில் சிலர் இரவோடு இரவாக நடந்து நவாலியூடாக யாழ்ப்பாணம் சென்றனர். (ஓ-175)

### பாரதீய ஜனதா காலை வாரியது

## உத்தரப் பிரதேச முதல்வர் மாயாவதி இராஜினாமா!

இந்தியாவின் மிகப்பெரிய மாநிலமான உத்தரப் பிரதேசத்தில் ஏற்பட்ட அரசியல் நெருக்கடியை அடுத்து மாநில முதலமைச்சர் மாயாவதி நேற்றிரவு தமது பதவியை இராஜினாமாச் செய்தார்.

மாநில சட்டசபையில் ஆறில் ஒரு பங்கு உறுப்பினர்களை மட்டும் கொண்டுள்ள பகுஜன் சமாஜக் கட்சியின் சட்டசபைத் தலைவியான மாயாவதி, பாரதீய ஜனதாக் கட்சியின் ஆதரவுடன் மூன்று மாதங்களுக்கு முன்னரே ஆட்சி அமைத்திருந்தார்.

அதுவரை காலமும் முதலமைச்சர் மூலாயம் சிங் யாதவ் தலைமையிலான சமாஜவாதிக்கட்சியுடன் இணைந்து மாநில அரசை அமைத்திருந்த மாயாவதியின் கட்சி முலாயம் சிங் யாதவ் அரசுக்கு வழங்கி வந்த ஆதரவை விலக்கி அந்த அரசைக் கவிழ்த்ததும் —

பின்னர் பாரதீய ஜனதாக் கட்சியின் ஆதரவுடன் மாயாவதியின் கட்சி ஆட்சி அமைத்ததும்தெரிந்தவையே.

தற்போது அந்த அரசுக்கு வழங்கி வந்த ஆதரவை பாரதீய ஜனதா வாபஸ் பெற்றுக் கொண்டதை அடுத்து மாயாவதி தமது முதல்வர் பதவியை இராஜினாமாச் செய்தார். இந்த இராஜினாமாவை மாநில ஆளுநர் மோதிலால் வோரா ஏற்றுக் கொண்டார். (உ)

### பகிஷ்கரிப்பு

கொழும்பு, ஒக். 18

பேராதனைப் பல்கலைக்கழகம் நீண்ட நாட்களின் பின்னர் மீண்டும் நேற்றுத் திறக்கப்பட்டது.

எனினும் மாணவர்களில் பலர், சில கோரிக்கைகளை முன்வைத்து விரிவுரைகளைப் பகிஷ்கரித்தனர். இதனால் அங்கு அமைதியின்மை நிலவியது. பாதுகாப்புக் கடமைக்குப் பொலீஸார் அழைக்கப்பட்டனர். [அ]

### தங்கப் பதக்கம் வென்றதற்கு

## ஸ்ரீலங்கா வீராங்கனை போதைவஸ்து பாவித்தார்?

அண்மையில் ஜகார்த்தாவில் நடைபெற்று முடிந்த 11ஆவது ஆகிய விளையாட்டுப் போட்டிகளில் ஸ்ரீலங்காவுக்குக் கிடைத்த இரண்டு தங்கப் பதக்கங்களில் ஒன்றையும் மற்றுமொரு வெள்ளிப் பதக்கத்தையும் வென்று தந்தவரும் —

அவ்விளையாட்டுகளில் பெண்களுக்கான இருநூறு மீற்றர் ஓட்டத்தை 23 செக்கன்களில் ஓடி முடித்து புதிய ஆசிய சாதனையை நிலைநாட்டியவருமான சந்திரிகா ஜெயசிங்க, வெற்றியீட்டுவதற்காக போதை வஸ்து பாவித்தார் என்ற குற்றச்சாட்டு எழுந்திருக்கிறது.

அவர் "நன்னிலோன்" என்ற போதைவஸ்தைப் பாவித்தார் என்பது அவர் மீதான முதலாவது மருத்துவப் பரிசோதனையில் நிரூபிக்கப்பட்டுள்ளது என சர்வதேச அமைச்சூர் மெய்வல்லுநர் சங்கம் ஸ்ரீலங்கா அமெச்சூர் மெய்வல்லுநர் சங்கத்திற்கு முறையிட்டுள்ளது. மேலும் அவர் மீது இரண்டாவது மருத்துவப் பரிசோதனையை போட்டி நடைபெற்ற 14 நாட்களுக்குள் இலங்கையில் மேற்கொள்ளுமாறும் அது தெரிவித்துள்ளது. (உ-10)

## மாவுடன் 'ஹபரண' கப்பல் இன்று இங்கு வருகிறது

ஆயிரம் மெற்றிக் தொன் மாவுடன் 'ஹபரண' கப்பல் இன்று பருத்தித் துறைக்கு வந்து சேரும் என நேற்று மாலை யாழ்ப்பாணத்துக்கு தகவல் கிடைத்தது.

நேற்று மாலை 5 மணியளவில் திருகோணமலையில் இருந்து புறப்பட்ட இக்கப்பல் இன்று காலை காங்கேசன் துறைக்கு வந்து அங்கு சோதனை முடிந்தபின் பருத்தித்துறைக்கு வந்து மா இறக்கும் பணியை உடன் ஆரம்பிக்கும்.

இக்கப்பலில் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் புதிய இலங்கைப்பிரதிநிதி உட்பட அதிகாரிகளோன ஐ.நா. அகதிகள் தூதரகம் எம்.எஸ்.எவ், எம்.சி.எவ் மற்றும் பல அமைப்புக்களைச் சேர்ந்த 20 அதிகாரிகள் வரை வருகின்றனர். (ஓ-3)

## தென்னங்கன்று விநியோகமும் கருத்தரங்கும்

யாழ்ப்பாணம், ஒக். 18

தென்னை பயிர்ச் செய்கைச் சபையினரால் வீட்டுத்தோட்ட மானியத் திட்டத்தின் கீழ் சாவகச்சேரி பிரதேச செயலர் பிரிவில் தெரிவு செய்யப்பட்ட கிராமங்களாகிய இடைக்குறிச்சி, மாசேரி, வரணி வடக்கு ஆகிய கிராமங்களில் உள்ள தென்னை செய்கையாளருக்கு வீட்டுத்தோட்ட நடுகைக்கான இலவச தென்னங்கன்று விநியோகமும், தென்னை செய்கை கருத்தரங்கும் நாளை வியாழக்கிழமை இடைக்குறிச்சி சுப்ரமணிய வித்தியாசாலையில் பிற்பகல் 2 மணிக்கு நடைபெறவுள்ளது. (எ)

### நேற்று மோதல் ஆரம்பித்ததும்

## போக்குவரத்து ஒழுங்கில் காவல்துறையினர் ஈடுபாடு

யாழ்ப்பாணம், ஒக். 18

வலிகாமம் கிழக்கில் நேற்று இடம்பெற்ற மோதலின் போது காயமடைந்தவர்களை யாழ். ஆஸ்பத்திரிக்கு எடுத்து வருவதற்கு இடைஞ்சல் எதுவும் ஏற்படாதவாறும், வீதிவிபத்துக்கள் இடம் பெறாதவாறும் காவல்துறையினர் நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

காலை முதல் இரவு வரை மோதல் நடைபெற்ற பகுதிகளில் இருந்து யாழ் ஆஸ்பத்திரிவரையிலான வீதிகளில் காவல்துறையினர் கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

காவல்துறையினர் அம்புலன்ஸ் மற்றும் காயமடைந்தவர்களை ஏற்றிவந்த வாகனங்களுக்கு இடைஞ்சல் ஏற்படாதவாறு வீதிப்போக்குவரத்தை சீர்செய்து ஒழுங்குபடுத்தினர். (ஓ-15-18)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலி. கிழக்கில் அகோர ஷெல் தாக்கு

# 4 அப்பாவிகள் பலி; 15 பேர் படுகாயம்

## ஆயிரக் கணக்கில் பொதுமக்கள் வீடுகளை விட்டு இடம்பெயர்ந்தனர்

வலிகாமம் கிழக்கு, ஒக்டோபர். 18

**வலிகாமம் கிழக்கில் முன்னேற முயன்ற படையினர் நேற்றுப் பகல் முழுவதும் மக்கள் குடியிருப்புகளை நோக்கி கண்மூடித்தனமாக நடத்திய அகோர ஷெல், பீரங்கித் தாக்குதலில் அப்பாவிப் பொதுமக்கள் நால்வர் பலியானார்கள்; 15 பேர் படுகாயமுற்றனர்; பெருமளவு உடைமைகள் நாசமாகின; மக்கள் ஆயிரக் கணக்கில் இடம் பெயர்ந்தனர்.**

படையினர் நேற்றுப் பொழிந்த ஷெல் மழையினால் வீடுகள், கடைகள், ஆலயங்கள் என நூற்றுக்கு மேற்பட்ட கட்டடங்கள் பலத்த சேதமடைந்துள்ளன; கால்நடைகள் பல உயிரிழந்தன. பல இடங்களில் படுகாயமுற்ற கால்நடைகள் சிகிச்சையின்றி துடித்துக் கொண்டு கிடக்கக் காணப்பட்டன.

மேட்டுநிலப் பயிர்கள், வாழைத்தோட்டங்கள் சேதமடைந்தன.

தொடர்ந்து இடம்பெற்ற பீரங்கி, ஷெல் வெடிப்புகளினால் வலிகாமம் கிழக்குப் பகுதி நாள் முழுவதும் அதிர்ந்த வண்ணம் இருந்தது.

கோப்பாய், நீர்வேலி, சரசாலை, சிறுப்பிட்டி, உரும்பராய், ஊரெழு, அச்செழு, கோண்டாவில், மருதனார் மடம், இணுவில், மயிலங்காடு, சந்தரோடைப் பகுதிகளிலேயே நேற்று ஷெல்கள் விழுந்து வெடித்தன.

இதனால் இப்பகுதிகளையும் அவற்றை அண்டிய பிரதேசங்களையும் சேர்ந்த மக்கள் நேற்று விடிந்தும் விடியாத வேளையில் — போட்டது போட்டபடி இருக்க — வீடுகளை விட்டு வெளியேறி பாதுகாப்புத் தேடி ஓடினர்.

ஆயிரக்கணக்கில் மக்கள் உடைமைகளை கைவிட்டு அல்லோலகல்லோலப்பட்டு ஓடிவந்ததை நேற்றுக் காண முடிந்தது.

குழந்தை குட்டிகளுடன், மூடை முடிச்சுக்களை சுமந்தவாறு கால்நடைகளையும் ஓட்டிக்கொண்டு, கூட்டம் கூட்டமாக மக்கள் பாதுகாப்புத்தேடி இடம்பெயர்ந்தனர்.

கணிசமான எண்ணிக்கை யானோர் தமதுசுமைகளுடன் கால்நடையாக தென்மராட்சிப் பகுதி நோக்கிச் சென்றனர்.

வட்டுக்கோட்டை, நவாலி, ஆனைக்கோட்டை, கொக்குவில், திருநெல்வேலி, கல்வியங்காடு, இருபாலை, நல்லூர், யாழ்ப்பாணம் பகுதிகளில் உள்ள பொது இடங்கள், கோயில்கள்போன்றவற்றிலும் இடம்பெயர்ந்து வந்தோர் நேற்று தங்கி நின்றதை அவதானிக்க முடிந்தது

[உ-3-13-15-31 152-154]

### தென்மராட்சி...

(7 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை பொதுமக்கள் இடம்பெயர்ந்து ஓடோடி வந்து கொண்டிருக்கையில் கோப்பாய் பாலத்தை அண்டிய பகுதியிலும் சில ஷெல்கள் விழுந்து பெரும் சத்தத்துடன் வெடித்தன. (ஒ-31)

### வலி. கிழக்கில்--

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

அப்பகுதிகள் புலிகளின் கட்டுப்பாட்டின் கீழ் வந்துவிட்டதாகவும்—

சிற்சில இடங்களில் நேற்று மாலைவரை சண்டை தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருந்ததாகவும்—

நேற்றிரவு களத்திலிருந்து கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

தமது முன்னைய நிலைகளுக்கு பின்வாங்கி ஓடிய படையினர் மீது புலிகள் தொடர்ந்து தாக்குதல் நடத்தி வருவதாகவும் தெரிய வந்தது.

புலிகளின் தாக்குதலில் அரச துருப்புகளுக்கு நேற்று பேரிழப்பு ஏற்பட்டதை அரசதரப்புச் செய்திகளும் ஓரளவு ஊர்ஜிதம் செய்தன.

பெரும் எண்ணிக்கையான துருப்புகள் பலியானதாகவும் —

நூற்றுக் கணக்கான படையினர் படுகாயமுற்றுள்ளதாகவும் —

மேலும் காயமடைந்த பல படையினர் கொழும்புக்கு அவசர சிகிச்சைக்காக எடுத்து வரப்படுவர் என எதிர்பார்க்கப்படுவதாகவும் —

பி. பி. ஸியின் கொழும்புச் செய்தியாளர் குறிப்பிட்டார்.

நேற்றைய இராணுவ நடவடிக்கையில் ஸ்ரீலங்கா இராணுவத்தின் பொறியியல் படையணியும், பீரங்கி அணியும் ஈடுபடுத்தப்பட்டதாக பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கை தலைமையக வட்டாரங்கள் தெரிவித்தன.

அரச துருப்புகள் முன்னேற்ற முயற்சியை ஆரம்பித்த சமயம், அதனை எதிர்பார்த்துக் காத்திருந்தது போல தயாரான நிலையில் புலிகள் பதிலடியை ஆரம்பித்ததாகவும் —

அது அரச துருப்புக்களை நிலை குலைய வைப்பதாக [illegible] மற்றொரு செய்தி நிறுவனம் குறிப்பிட்டது.

### ஷெல்வீச்சில் பலியான 4 பொதுமக்களின் விவரம்

வலிகாமம் கிழக்கில் நேற்று ஸ்ரீலங்கா படையினர் நடத்திய ஷெல் தாக்குதல்களில் உயிரிழந்த நான்கு பேர் விவரம் வருமாறு:-

★ திருநாவுக்கரசு சுரேந்திரன் (வயது 7) மாதனையில் இருந்து இடம்பெயர்ந்திருந்த இச்சிறுவன் கோண்டாவிலில் விழுந்த ஷெல்லினால் உயிரிழந்தான்.

★ 13 வயது மதிக்கத்தக்க மற்றொரு சிறுவன். கோண்டாவிலில்விழுந்தஷெல்லினால் படுகாயமுற்ற நிலையில் யாழ் ஆஸ்பத்திரிக்கு எடுத்து வரப்பட்ட இச்சிறுவன் அங்கு மரணமானான். பெயர், விவரம் இச்செய்தி அச்சுக்குப் போகும் வரை தெரியவரவில்லை.

★ செல்லத்துரை சிவலிங்கநாதன் (வயது 47) குப்பிளானிலிருந்து இடம்பெயர்ந்த இவர் ஊரெழுவில் விழுந்த ஷெல்லினால் உயிரிழந்தார்.

★ உரும்பராய் வடக்கு வினாசித்தியடிப் பகுதியில் விழுந்த ஷெல்லினால் ஒருவர் உயிரிழந்தார். மனைவி பிள்ளைகளுடன் சைக்கிளில் இடம்பெயர்ந்து ஓடி வந்து கொண்டிருந்த சமயம் இவர் ஷெல்லுக்கு இரையானார். இவரின் சடலம் மீட்கப்படாது அந்த இடத்திலேயே கிடப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. [உ-15]

### ஷெல் தாக்குதல்களினால் நேற்று காயமுற்றோர்

வலி. கிழக்கில் நேற்று இடம்பெற்ற மோதலின் போது மேற்கொள்ளப்பட்ட ஷெல் தாக்குதலினால் காயமடைந்து யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளோர் விவரம் வருமாறு:-

மயிலங்காட்டில் விழுந்த ஷெல்லினால் —

★ நாகன் அப்புத்துரை [வயது 50]

★ அப்புத்துரை செல்வராசா [வயது 35]

★ பேரம்பலம் அன்னபூரணம் (வயது 32)

உரும்பராய் வடக்குவினாசித்தியடிப் பகுதியில் விழுந்த ஷெல்லினால் —

★ நன்னியன் மார்க்கண்டு (வயது 55)

★ கந்தன் பரமு (வயது72)

கோண்டாவிலில் விழுந்த ஷெல்லினால் —

★ மாணிக்கம் இராஜேஸ்வரன் (வயது 13)

★ நாகரத்தினம் சிவிதரன் (வயது 22)

சரசாலையில் விழுந்த ஷெல்லினால் —

★ சந்தையா பரமானந்தம் (வயது 50) இருபாலையைச் சேர்ந்தவர்.

★ தேவதாஸ் கலாஸ்கர் (வயது 12)

ஊரெழுவில் விழுந்த ஷெல்லினால் —

★ திருநாவுக்கரசு சஜிந்தா (வயது 16)

★ ஜெயராசா மனோன்மணி [வயது 40]

★ தேவமனோகரி தேவராணி [வயது 17]

நீர்வேலியில் விழுந்த ஷெல்லினால் —

★ சே. பரமானந்தம் [வயது 48]

அச்செழுவில் விழுந்த ஷெல்லினால் —

★ இராசேந்திரம் ராணி (வயது 42) — சுன்னாகத்தில் இருந்து இடம்பெயர்ந்தவர் ஆகியோராவர்.

ராணி என்பவரின் தந்தை சின்னவன் வைரவன் (வயது 70) என்பவரும் ஷெல்லினால் பலத்த காயமடைந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. ஆனால் இவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்படவில்லை. அவருக்கு என்ன நடந்தது என்பது தெரியவரவில்லை. [உ-15]

### தீவிர சிகிச்சை

யாழ்ப்பாணம், ஒக். 18

நேற்றைய இராணுவ நடவடிக்கையின்போது காயமுற்றவர்களுக்கு சிகிச்சை அளிப்பதற்காக யாழ். ஆஸ்பத்திரி நேற்று சுறுசுறுப்பாக இயங்கியது.

டாக்டர்கள், தாதியர் மற்றும் ஊழியர்கள் தமது உணவையும் மறந்து கடமையில் கண்ணாக இருந்தனர். (ஒ-15)

### ஷெல்லில் பலியானவரின் சடலம் மீட்கப்படவில்லை!

யாழ்ப்பாணம். ஒக். 18

நேற்று படையினர் நடத்திய ஷெல் தாக்குதலினால் உரும்பராய் வடக்கில் உயிரிழந்த ஒருவரின் சடலம் பல மணி நேரம் மீட்கப்படாத நிலையில் அந்த இடத்திலேயே கிடந்தது.

நேற்று காலை 8 மணியளவில் ஷெல் தாக்குதலுக்கு அஞ்சி சைக்கிளில் மனைவியையும், மகளையும் ஏற்றிக் கொண்டு இடம்பெயர்ந்து ஓடிக் கொண்டிருந்த ஒருவரே ஷெல் தாக்குதலினால் அந்த இடத்தில் உயிரிழந்தார் என்று கூறப்படுகிறது.

இவரைத் தூக்கி உதவி செய்யுமாறு இவரது மனைவியும், மகளும் பலரை வேண்டிய போதும் அவசரமாக ஓடிக் கொண்டிருந்த மக்கள் உதவ முன்வரவில்லை என்றும்—

இதனால் தனித்து விடப்பட்ட அப்பெண்கள் சடலத்தை துணி ஒன்றினால் மூடி விட்டு அங்கிருந்து ஓடித் தப்பி வந்தனர் என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டது.

சடலம் நேற்று இரவு வரை அவ்விடத்திலேயே மீட்கப்படாத நிலையில் இருந்தது உயிரிழந்தவரின் பெயர் விவரம் இச் செய்தி அச்சுக்குப் போகும் வரை தெரியவரவில்லை. [உ-15]

## மரண அறிவித்தல்கள் இரண்டாம் பக்கத்தில்


**தீபாவளி மலிவு விற்பனை!**

திருமாட்டி
[சிமாட்டி]
(புடைவைக் கடல்)

தீபாவளியை முன்னிட்டு அனைத்து ஜவுளித் தினுசுகளும் மலிவு விலையில் விற்பனையாகிக் கொண்டிருக்கின்றன.

திருமண சுபமுகூர்த்தக் கூறைச் சேலைகள், காஞ்சிபுரம், மைசூர்சில்க், பெங்களூர் சில்க்,பட்டு வேட்டிகளுக்கும் ஒரே ஸ்தாபனம்

திருமாட்டி புடைவைக் கடல்
122, மின்சார நிலைய வீதி.
யாழ்ப்பாணம்.
[சி-2487]



**தீபாவளி பண்டிகையை**
முன்னிட்டு
சகல விதமான புடைவைகளையும்
ஒரே இடத்தில் மலிவாக
பெற்றுக்கொள்ள
இன்றே விஜயம் செய்யுங்கள்;
★ சிவகணேசன்
பட்டுச்சோலை
41, மேஜர் சோதியா தெரு,
யாழ்ப்பாணம். (பெரியகடை)
(சி-2483)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிகேசன் [பிறைவேற்] லிமிடெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 293/2இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 18 - 10 - 95 இல் அச்சிட்டு வெளியிடப் பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org